# ஆத்ம ஜோதி



# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. (சுத்தானந்தர்)

| சோதி 10 | ஏவிளம்பி௵ மாசி௴ (15-2-58) | சுடர் 4 |
|---|---|---|


## பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| பாடுபட்டுப் பிழைப்போம் | ... | 93 |
| குருவின் சப்தம் | ... | 94 |
| வெள்ளம் பெருகிற்று | ... | 95 |
| செல்வத்துள் சிறந்த செல்வம் | ... | 99 |
| யோக ஆசனங்கள் | ... | 101 |
| பிரார்த்தனை | ... | 104 |
| பிரம்மச்சரியம் | ... | 106 |
| சமயப்பண்பாட்டினை மறவாதீர் | ... | 109 |
| அகச்சாதனங்களும்—புறச்சாதனங்களும் | ... | 113 |
| மயக்கிடும்மனிதனின்மர்மம் | ... | 114 |
| நாமதேவர் | ... | 118 |
| ஜீவகாருண்யம் | ... | 121 |


(மயக்கிடும்மனிதன்மர்மம் 110-ம்பக்கம் என்பதை 114-எனவாசிக்க)


### ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூபா 75. வருடச்சந்தா ரூபா 3.
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்: நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி (இலங்கை)

அச்சுப்பதிப்பு: ஸ்ரீ முருகன் அச்சகம் - பூண்டுலோயா.


# பாடுபட்டுப் பிழைப்போம்

(மகரிஷி சுத்தானந்தர்)

**(வராளி)** **(ஆதி)**

பல்லவி

பாடுபட்டுப் பிழைப்போம் - மனிதா
பலருக்கு நலம்வர உழைப்போம்! (பாடு)

அனுபல்லவி

ஓடுபற்றித் திரியோம் – வேர்வை!
ஊற்றிநம் உடலினை வளர்ப்போம்! (பாடு)

சரணம்

கோடி தொழில்கள் உண்டே - இங்கே
கூழுக்குப் பஞ்சமினி யுண்டோ?
வாடிடும் வறுமையெல்லாம் - சோம்பலால்
வந்த பெருந்துய ராமே! (பாடு)

வேஷத் துறவை விட்டே – கர்ம
வீரத் துறவிகளாய்த் தலைநிமிர்வோம்
காஷாயச் சாமிகளும் - இனிக்
கப்பறை ஏந்தாமல் கலப்பை பிடிப்போம் (பாடு)

உழைக்காத கைகளுக்கு - மனிதா
உண்ண உரிமையில்லை மண்ணுலகில்
பழக்கிய கைகளினுல் – இந்தப்
பார்விண்ணுகுங்கர்ம யோகஞ் செய்வோம் (பாடு)

# குருவின் சப்தம்
## என்னுடைய ஆத்மாவுக்குப்பேசியது
(தியானகாலம்)

என்மகனே! உன்னுடைய வளர்ச்சியின் சரித்திரத்திலும் பார்க்க, மனதைக்கவரும் தன்மையுடையது வேறொன்றுமில்லை. சுய இயல்பின் வளர்ச்சியே வாழ்க்கையை இனிய தாக்குகின்றது. சாட்சியாயிரு! புறத்தே நிற்பது போல்நின்று உன்னுடைய சுய இயல்பைப்பிறிதோர்பொருளெனநினைத்து, அதை ஆராய்ந்து பார். வழிதப்பிச் சென்ற நினைவையும், பறந்து செல்லும் ஆசையையும் ஆராய்வு செய். நேற்றைய அனுபவங்களின் பெருமையெல்லாம் எவ்வளவு நிலையற்றன! இப்போநடக்கும் காரியங்களினால் ஒருதலைமுறையின் பின்வரும் பயன் யாது! இதை நினைந்து கொண்டு மனத்தளர்வின்றிச் சீவியத்திற்கூடாகச்செல். பிரபஞ்சப்பொருள்யாவும் பயனற்றன. அவைநிலையற்றன. ஆகையால் உனது நேரத்தை ஆன்ம சம்பந்தமான கருமங்களிற் செலவுசெய். பற்றற்றவனாக இரு. தியானத்துள் மூழ்கு. சந்நியாச நோக்கமே உன்னதாக இருக்கட்டும். ஒரு அனுபவத்தின், அல்லது ஒருநோக்கத்தின் பயன் ஒழுக்கத்தை வருவிக்குந் தன்மையைப் பொறுத்திருக்கின்றது. இதை உணர்ந்து நீ ஒரு புதிய திருஷ்டியுள்ள வாழ்க்கையைத்தேடு.

நொய்மையுடைய மட்கலமாகிய இந்தத் தேகத்திற்கு எவ்வளவு நேரத்தைப் பிரபஞ்சப்போக்குள்ள மனிதர்கள் கொடுக்கிறார்கள். அழியுந் தன்மையவாய சடப்பொருள்களிலே அவர்களுடை மனம் எவ்வளவு பற்றி நிற்கின்றது? அவர்கள் அழியும் பொருள்களைப்பற்றி, அவற்றால் நின்று அழிந்து போகின்றார்கள். மாயைக்குள் அகப்பட்டு அதனால் விழுங்கப்படுகின்றார்கள். ஆகையால் உலகப்பற்றுள்ள விடயங்களில் முயற்சி செய்வதை விடு, உலகப்பற்றுள்ளவர்கள் கூட்டத்திலிருந்து விலகு. மனம் எவ்வளவு நுண்ணியது. அதுகூடப்பொருள்களைக்கௌரவப்படுத்த எந்தநேரமும் முயற்சிக்கின்றது. அதுவே மாயையின் சாலவித்தை.



# வெள்ளம் பெருகிற்று
(ஆசிரியர்)

அரிமர்த்தன பாண்டியன் காலத்திலே பாண்டிநாட்டில் ஒருமுறை பெரியவெள்ளம் வந்தது. சாமான்யமக்கள் கற்பனை செய்யமுடியாத காரணத்தினாலே வைகை பெருகிற்று பாண்டிநாடே வெள்ளக்காடாக விளங்கியது சாமானிய வெள்ளம் அன்று; ஊழிக்கால முடிவோ எனும்படி வெள்ளம் பாய்ந்தது. மககள் அல்லோலகல்லோலப்பட்டு அரண்மனைக்கு ஓடினர் அரசனுக்கும் வெள்ளத்திற் குரிய காரணம் விளங்கவில்லை. உள்ளூரக் காரணம் விளங்கியது. வெளிக்குக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. வேறுயாராவது காரணத்தைக்கூறினால் தாமும் ஆமாப்போடலாம் என்று இருந்துவிட்டான்.

மந்திரி, பிரதானிகள், சான்றோர்களை அழைத்தான். அவர்களிடம் காரணத்தை வினவினான். நான் ஏதாவதுதெரியாமல் குற்றம் செய்திருந்தால் அதனைச்சொல்லுங்கள்; திருந்தி நடக்கிறேன் என்ற பாவனையாகக் கேட்கிறான் மன்னவன்.

*ஆதியாங் கடவுளெந்தை யாலவாய் அமலன் மங்கை*
*பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்த துண்டோ*
*நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேற்*
*றீதியாஞ் செய்த துண்டோ செப்புமி னமைச்ச ரென்றான்.*

எம்பெருமானுக்கு விதிப்படிசெய்யும்நித்தியநைமித்தியபூசைகள் முன்னையினும்பார்க்கக் குறைவடைந்தனவோ? அல்லது நீதியாகிய தவத்தான் மேம்பட்ட பெரியோர்களது மனம் புழுங்க அவர்க்கு நாம் கொடுமை செய்ததுண்டோ? இவற்றில் யாது காரணமாய் இருக்கலாம் என அரசன் மந்திரிமாரை வினவினான்.

திருவாதவூரடிகளைச் சிறையிலடைத்தமை அநீதி என்பதை மன்னன் அறிவான். மற்றையோர் வாயினால் வரவேண்டுமென்று கருதி இவ்விருகேள்விகளையும் குறிப்பாகக் கூறுகின்

றான். உள்ளத்திலே உள்ளது வாக்கிலே வந்துவிடுகின்றது. மந்திரிமார் அரசனது பெலவீனத்தை உணர்ந்து கொண்டனர். தகுந்தசமயம். மனந்துணிந்து காரணத்தைக் கூறுகின்றனர். இதற்கு முன்பு இடித்துரைசெய்ய அவர்களுக்குத்தைரியம் வரவில்லை. அரசனும் கேட்கும் நிலையிலில்லை. இப்போ அரசனே ஒருபடி கீழே இறங்கிவந்து விட்டான். தான் நினைப்பதையே மந்திரிமாரும் கூறவேண்டுமென விரும்புகின்றான் மன்னவன். இறைவனை வேண்டுகின்றான்.

சிவபிரானுக்கு அன்பராயுள்ள அருட்செல்வம் விளங்குந் திருவாதவூரடிகளை அவர்துன்பமுறும் சிறையினின்று நீக்கி அவரை மகிழ்வித்தால் வெள்ளம் நம்மதுரையை அழியாதென்றனர். மன்னன் மகிழ்ந்தான். வாதவூரரை மகிழ்வித்தான். வெள்ளம் வடிந்தது. ''முன்னவனார் கோயிற்பூசைகண் முட்டின் மன்னர்க்குத் தீங்குள'' ஆகலின் பூசைபண்டையிற் குறைந்ததுண்டோ என முதலிற்கேட்டான். அது காரணமன்று என்பது எல்லார்க்கும் விளங்கியது. அடியார்க்குச் செய்த தீங்கு ஆண்டவர்க்குச் செய்நதீங்காகும் என்பதை அரசன் உணர்ந்தான். உடனே இரண்டாவது கேள்வியையும் கேட்டு வைத்தான். மந்திரிமாரும் உண்மையை உரைத்தனர். அரசனும் ஏற்றுக்கொண்டான். இறைவனும் மகிழ்ந்தான். வெள்ளமும் வடிந்தது.

இறைவன் கருணையே வெள்ளமாகப் பெருகிற்று. திருவாதவூரடிகளது துன்பத்தைப் போக்கியது. பாண்டியனது அகக்கண்களைத் திறந்து வைத்தது. ஆதலால்தான் அவ்வெள்ளத்தை கருணை வெள்ளம் என்கிறோம்.

சென்றமாதம் இலங்கையிலும் இறைவன் கருணை, வெள்ளமாகப் பாய்ந்தது. பலரும் பலப்பல காரணங் கூறினர். இயற்கையன்னையின் சீற்றம் என்றனர்; தமிழர்க்குச் செய்த தீங்கு என்றனர்; அரசஅநீதி என்றனர்; மக்களின் கொடுமை என்றனர்; கற்புள மகளிரும் தவம் செய்வோரும் இல்லையோ என்றனர். ஆண்டவன் திருவிளையாடலை யாரே அறிவார்.



பிற உயிர்கள் மீது கருணைகாட்டயாவருக்கும் ஒரு சந்தர்ப்பத்தை அளித்தான் இறைவன். அச்சந்தர்ப்பத்தைக் கூடப் பயன்படுத்தத் தவறிவிட்டனர் மக்கள். நாம் எண்ணியபடி எதுவும் நடக்காது, ஏதும் அவன்செயல் என்பதைக்காட்டியது திடீரெனப் பெருகிய வெள்ளம். 'காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கே' என்பதைப் பலகாலும் படித்தோம். உணரவில்லை. வெள்ளத்தோடு அள்ளுப்பட்டுச் சென்ற பொருட்களை நினைக்கும்போது பட்டினத்தார் பாடலைச் சிறிது உணர முடிகிறது.

திடீரென வீட்டுள் வெள்ளம் புகுந்து விட்டது. நாலு அடித் தண்ணீர். உயிர் ஒன்றே பெரிதாகத்தோற்றியது. எனது என்றிருந்தவை யெல்லாம் போய்விட்டன. உயிரைக்காப்பாற்ற ஓடினார்கள் மேட்டிற்கு. இத்தருணத்திலே கொள்ளைக் கூட்டம் புறப்பட்டது. வெள்ளம் கொண்டுசென்று மிஞ்சியவற்றைத் தமக்கு ஆக்கிக் கொண்டார்கள். இத்தருணத்திலே தானும் இந்த நயவஞ்சகர்களுக்குக் கருணை வரவில்லையென்றால் வேறு எப்போதான் வரப்போகின்றதோ அறியோம். தன் பொருளைக்கொடுத்தே பிறருயிரைக் காப்பாற்றவேண்டிய தருணத்தில் அகதிகளின் பொருளைக் கொள்ளையடிப்பவன் கருணையை என் என்பது? அவனிடம் அப்பொருள் நிலைக்குமா? நின்றவெள்ளத்தை வந்தவெள்ளம் அள்ளிக்கொண்டு சென்றமாதிரியல்லவா முடியப்போகின்றது. இதனை அறிவார்களா அவர்கள். 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' என்கிறார் வள்ளுவர்.

உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி வாடினர் வெள்ள அகதிகள். உலகமே இவர்கள் ஓலத்திற்குக் காது கொடுத்துக்கேட்டது. உடனே வேண்டியஉதவிகள் வந்தன. ஒவ்வொரு கிராமத்திற்கும் பொதுநலத்தொண்டர்கள், தலைவர்கள் முளைத்தனர். சென்ற தெருவில் நடந்த வஞ்சத்தைத் தீர்க்க முற்பட்டனர் சிலர்; அடுத்த தெருவுக்கு ஆதரவு தேடினர் ஒருசிலர்; இப்போ இருக்கும் ஸ்தானத்திற்கு உறுதிதேடினர்வேறுசிலர். 'ஊராவீட்டுநெய்யே என்பெண்டாட்டிகையே'

என்பதுபோல் உற்ருர் உறவினர்மேல் தம்கருணையைப்பொழிந்தனர் பிறிதொருசாரார். இரண்டு கூப்பனுக்கு வேண்டிய அரிசியைக் கொடுத்து ஆறு கூப்பனை வெட்டி ஓட்டிக்கொண்டார்கள் பொதுநலத்தொண்டர்கள். இவர்கள் கருணைதான் வெள்ளமாகப் பெருகியது. பெருகியது மாத்திரமன்று அணைக்கட்டை உடைத்துச் சென்று விட்டது. இத்தகைய கருணையாளர்கள் இருக்கும்போது குளம் பாலைவனமாகக் காட்சியளிப்பதில் யாதொரு வியப்பும் இல்லையல்லவா? கருணைக்காக ஏற்படுத்திய சந்தர்ப்பத்தையே மனிதன் மாற்றியமைத்து விட்டான். கருணையாரிடம் சென்று தான் அடைக்கலம்புகப் போகின்றதோ அறியோம்.

ஆண்டவன் கருணை வெள்ளமாகப் பெருகியது. மனிதன் கருணை நெஞ்சக்கனகல்லாய், இரும்பு நேர்நெஞ்சகக் கள்ளமாய்க் கடுமையாகிவிட்டது. ஆபத்தில் வாராத கருணை எப்போ வரப்போகின்றது. மரணவாயிலில் கிடைக்காத அறம் மறுபிறப்பிலா கிடைக்கப்போகின்றது. கருணைகாட்டுங்கள்; கருணைகிடைக்தும். நீதி செலுத்துங்கள்; நீதி கிடைக்கும். அன்புசெலுத்துங்கள்; அன்பு கிடைக்கும்.

## துணுக்குகள்

நம்மைப்பற்றி நாமே என்ன எண்ணிக் கொண்டாலுஞ் சரி, தன்னை யறிந்த பேரின்பநிலையை அடைந்தாலன்றி ஒருவன் உண்மையான முழுவிவேகியாக இருக்கமுடியாது.

அந்தராத்மா ஒவ்வொருவர் உள்ளத்திலும் மறைந்திருக்கிருன். நல்லோர்மனம் பளிங்குபோல் இருக்கிறது; அவனைக் காண்கிறது; மனச்சாட்சியானது அவன் சொற்படி நடக்கிறது.



# செல்வத்துள் சிறந்த செல்வம் - உடல்நலம்.

(ஸ்ரீ சுவாமி சிவானந்தர்)

உடல் நலமே உயரிய செல்வம். அதுவே உங்கள் மூலதனம். நல்லாரோக்கியம். பலமின்றி நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற முடியாது; ஆத்மானுபூதி அடைய முடியாது. உடல்நலமின்றி வாழ்க்கையை நீங்கள் நல்லமுறையே அனுபவிக்கமுடியாது. இந்நூலில் தெரிவிக்கப்படும் திட்டவட்டமான சட்டங்களைப் பின்பற்றுவதால் நல்லாரோக்கியம் ஏற்பட வழிபிறக்கும். ஆரோக்கிய நியதிகளைப் புறக்கணிக்கின்றவர்கள் பெரும் துன்பததிற்கு இலக்காகி அகால மரணத்தை அடைகின்றனர். ஆத்மீக வாழ்விற்கும் நல்லாரோக்கியம் இன்றியமையாதது. நல்லாரோக்கியமின்றி சாந்தியைப்பெற முடியாது; துள்ளிக்குதிக்கும் புலன்களோடும், ஓடித்திரியும் மனத்தோடும் போர் தொடுக்கமுடியாது.

உயர் செல்வமாகிய உடல்நலமே விரும்பத்தக்க உடமை. அதுவே அனைவருடையவும் விலையுயர்ந்த மூலதனம். உடல் நலத்துடன் உங்களிடம் மனநலமும் பொருந்த வேண்டும். நல்லாரோக்கியமின்றி எத்துறையிலும் நீங்கள் சிறந்து விளங்க முடியாது.

நன்கு நித்திரை செய்து உட்கொள்ளும் உணவை நன்கு ஜீரணிக்கச் செய்து பிணியின்றிச் சஞ்சலமின்றிச் சந்தோஷத்துடன் நிற்கும் நிலையே ஆரோக்கியம். ஆரோக்கியத்துடன் வாழும் ஒருவரின் இதயம், மூச்சுப்பை, மூளை, சிறுநீரகங்கள் கல்லீரல், சிறுகுடல் முதலிய உடலுறுப்புகள் அனைத்தும் இசைந்து; ஒன்றுபட்டுப் பணியாற்றுகின்றன; தங்கள் தொழில்களைச் சரிவரச்செய்து தீர்க்கின்றன; நாடித் துடிப்பினுடையவும், மூச்சினுடையவும் அளவு ஒழுங்காக அமைகின்றது. சரீர சீதோஸ்ண நிலை சாதாரணமாகவே இருக்கின்றது. நல்லாரோக்கிய முடைய

நகைக்கிறான், சிரிக்கிறான்! அவன் மகிழ்ச்சி யுடையவனைக் காணப்படுகிறான். அன்றாடக் கடமைகளை அவன் எளிதிலே செய்து முடிக்கிறான். சோர்வின்றி வெகுநேரம் வேலைசெய்ய அவனால் முடிகிறது. மலச்சிக்கல் ஏற்படுவது கிடையாது; அவனிடம் மிகச்சிறந்த முறையில் சரீர-மனோ வலு நிலவுகிறது.

உடல்நலம் பிணியற்ற நிலை மட்டுமல்ல. ஆரோக்கிய முடைய மனிதனால் சரீரத்தினாலும், மனத்தினாலும் அதிக மான வேலையைச் செய்யமுடியும்; வெகுநேரம் நல்லதியானத் தில் ஈடுபடமுடியும். ஆரோக்கியவான் கட்டுமஸ்தாகவும் பல வானாகவும் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை! அதே போல் கட்டுமஸ்தான பலவான் ஆரோக்கியத்துடன் இருப் பான் என்று சொல்வதும் சரியல்ல! வாழ்க்கையின் பின்னால் நின்று இயக்கும் சக்தியாகிய இயற்கை அன்னையின் வரப்பிர சாதமே ஆரோக்கியம். ஆரோக்கியமே உங்களின் பிறப் புரிமை பிணியல்ல! எங்ஙனம் உலகத்தில் தோன்றுவது இயற்கையோ அதேபோல் நல்லாரோக்கியத்துடன் வாழ்வதும் இயற்கையே.

பெரும் பொக்கிஷத்தையும்விட மதிப்புடையது ஆரோ க்கியம். அது ஆத்மீக விகாசத்தைத் தோற்றுவிக்கிறது; உய ரிய போதனைகளை ஏற்று நல்லொழுக்கத்தைப் போற்றுவதற் குரிய சக்தியை ஆக்குகிறது. ‘‘இவ்வரிய ஆத்மாசக்தியற்ற, ஆரோக்கிய மில்லாத ஒருவனால் அடையத்தக்கதல்ல’’ என்று உபநிடதங்கள் உறுதி கூறுகின்றன. உடல்நலமே செல்வத் துள் தலையாய செல்வம் நல்லாரோக்கியத்தைக் கொடு. இரா ஜாதிராஜனின் விருப்பை நிந்தனைக்கிடமாக்கி விடுகின்றேன்! என்று மார்தட்டுகிறான் எமர்சன். நல்லாரோக்கியம் நிறைந் தவன் மற்றொன்றையும் விரும்பத் தேவையில்லை. அவன் உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட்டவன் ‘‘நோயற்றவாழ்வில் நான் வாழவேண்டும்’’ என்று இறைஞ்சிநிற்கிறார் இராமலிங்க சுவாமிகள். வாழ்கையின் முதல் தேவையே உடல்நலம். அதுவே வாழ்க்கையின் அடிப்படை.

***நாம் எதற்காக உணவை உட்கொள்ளுகிறோம், எதை உண்ண வேண்டும் என்பதை அறிவதே ஆரோக்கியமான சரீரத்தை ஆக்குவதற்கான ஒரே வழி.***



# யோக ஆசனங்கள்:


(S. A. P. சிவலிங்கம்)

## 49, பெடலாசனம்

(பளகும்விதம்)

சுத்தமான சமதள விரிப்பின்மேல் கால்களிரண்டையும் நீட்டி மல்லாந்து படுத்துக் கொள்ளவும். கைகளிரண்டையும் விலாப்பக்கமாய் கீழே வைத்துக் கொள்ளவும்.

பின், கால்களை விறைப்பின்றியும், மிகவும் மெதுவாக இல்லாமலும் முழங்காலுடன் மடித்து மேல் தூக்கவும்; பின் அக்காலைக் கீழேவைத்து நீட்டி, மற்றக்காலையும் மடித்து மேல் தூக்கவும். சைக்கிளில் பெடலை எவ்வாறு நாம் மிதிக்கின் றோமோ அவ்வாறு மாற்றி மாற்றிச் செய்யவும். அந்நிலையில் சுவாசம் சமநிலையிலிருக்கவும். அதாவது விட்டிழுக்கும்படி செய்யவும். ஆனால் இந்த ஆசனம் ஓர்வித கஷ்டமுமில்லை என நேயர்கள் நினைக்கலாம். இதன்பலனோ மிகுந்தவற்றைத் தருகின்றது.




**பலன்கள்:** கால்களை மாற்றிமாற்றிமேல் தூக்குவதால் முழங் கால்பாதம் தொடை முதலியவற்றிற்கு சக்தியையும், இரத் தோட்டத்தையும் கொடுத்து சுறுசுறுப்பையுண்டாக்குகின்றது.

கீழ்வாத ஜுரம், மூட்டு வீக்கங்கள், நரம்புப் பிடிப்பு முதலியவற்றை அடியோடு நிவர்த்தி செய்கின்றது. ஆண, பெண் இருபாலாரும் தடையின்றி செய்யலாம்.

## 50, உத்திதஜக்கியபாத சக்கராசனம்

*(பழகும் விதம்)*

காற்ருேட்டமானதும், சமதளமானதுமான இடத்தில்கெட்டியான விரிப்பின்மேல் கால்கள், கைகளை முன்பக்கம் நீட்டி மல்லாந்து படுத்துக்கொள்ளவும்,


இந்நிலையில் உள்ளங்கைகள் கீழே படிந்திருக்கும் வண்ணம் அமைத்துக் கொள்ளவும். சுவாசத்தை வெளிவிட்டவாறே இரண்டு கால்களையும் முழங்காலுடன் மேல் தூக்கவும் பின்கைகளிரண்டையும் இப்போதிருந்தமாதிரியே நன்ருகக் கீழே அழுத்திக்கொண்டு சுவாசத்தைவெளிவிட்டவாறே கழுத்துடன்பிருஷ்டபாகம், இரண்டுகால்கள், வயிறுமுதலியயாவும் மேல் தூக்கி, கழுத்து, இரண்டு கைகளின் உதவியால் நிற்கவும். பின் வலதுகாலே சற்று மடக்கி இடதுகால் முழங்கால் மேல் வலதுபாதம் தொடும்வண்ணம் வைத்து இடதுகால் விறைப்பாய் வளையாது நேராய் வைத்திருத்தல் வேண்டும். இந்நிலையில் இயன்ருல் சுவாசம் வெளியும் உள்ளும் சுவாசிக்கலாம். முகம் நேராய் மேல்பார்த்தவண்ணமிருக்கவேண்டும். சித்திரம் 50 பார்க்கவும்.

இவ்வாறே மற்ற இடதுகாலையும் இம்மாதிரி மாற்றிச்செய்யவும். இவ்வாறு மூன்று தடவைகளுக்குமேல் உயர்த்திக் கொண்டு போகலாம்.

## ஆசனத்தைக் கலைக்கும் விதம்

மேல் தூக்கப்பட்டிருக்கும் இரண்டுகால்களையும் சுவாசத்தை உள்ளிழுத்துக் கொண்டே மெதுவாய்க்கீழேகொண்டு வந்து வைத்து நீட்டி சிரமபரிகாரம் செய்து கொள்ளவும்.






கால்களிரண்டையும் கீழே கொண்டுவந்து வைக்கும் சமயம் முதலில் இடுப்புடன் கீழே வைத்து (பிருஷ்டபாகமும்) பின், கால்களைக் கீழே வைக்கவும்.

இருபாலாரும் செய்யலாம். பெண்மணிகள் ருது, கர்ப்பகாலம்,மாதவிடாய்காலங்கள்தவிர மற்ற காலங்களில் செய்யலாம்.

**பலன்கள்:** சர்வாங்காசனத்தின் பலத்தையும் கைகள், விலா எலும்பு, வயிற்றின் உள்பாகம், கழுத்து முதலியவற்றிற்கு அதி ஆரோக்கிய சக்தியையும், ஜாடராக்கினிவிருத்திபாகி நல்ல பசியையும் உண்டுபண்ணும்.

இரத்தோட்டத்தைச் சுத்திகரித்து சுறு சுறுப்பை யுண்டு பண்ணும்.

***

## துணுக்குகள்

*ஒரே கதிரவன் உலகிற்கெல்லாம் ஒளி தருகிருன்; ஒரே அருளிறைவன் ஒவ்வொருவரிடமும் ஆன்ம ஒளியாகப் பரவுகிருன். ஆன்மாவே உள் மனிதன். அதன் நிழலே தூலமனிதன் பரமாத்மா ஒருவன்; தனது அருட்சக்தியால் அவன் எங்கும் பரவி எல்லாம் இயற்றுகிருன்.*

# பிரார்த்தனை

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.

(தாயுமானவர்)

கடவுளே! என்னைப் பொய்யிலிருந்து மெய்க்கு அழைத்துச் செல்லும்; இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும்; மரணத்திலிருந்து அமரத்துவத்திற்கு அழைத்துச்செல்லும்.

அருள் வள்ளலே! !உம்மை அடைய அருளும், என்னகத்தே எழுந்தருளும், அப்பொழுது நான் தூய்மை பெறுவேன்.

(உபநிடதம்)

அழியாத பரம் பொருளே! நீரே எல்லோர்க்கும் நண்பர், உம்முடைய அடியார்க்கு உம்மைத் தவிர வேறு புகலிடமில்லை.

(பாகவதம்)

பிரார்த்தனையின் மூலம் ஆன்மபலம் பெறுதல், பிரார்த்தனையை உள்ளன்புடன் செய்வதைப் பொறுத்ததாகும்.

(ஷின்டோமதம்

எவருடைய பிரார்த்தனை கடவுளர்க்கு இனியது? பிறர்க்கு ஈவோர், இன்சொல் கூறுவோர், அறநெறி நிற்போர் இவருடையதே

ஆண்டவனே! நான் உம்மிடம் வேண்டுவது இதுவே. உண்மையை எனக்கு உரைத்தருளும்.

அண்ணலே! அறநெறி நிற்பதற்கான நல்லெண்ணங்களை எண்ணும் ஆற்றலை அருள்வீர். அறத்தின் மூலம் உம்முடன் ஐக்கியமாகும் பேற்றை அருள்வீர்.

ஆண்டவனே! உம்மைப் பணிந்து வேண்டுகின்றேன். தோன்றுத்துணையாக நிற்கும் அண்ணலே! அறநெறியில் நிற்கும் அறிவை எனக்கருளும். எல்லோருக்கும் இன்பந்தரும் மார்க்கத்தைக் காட்டும்.

ஓ அஹூரா! நான் வேண்டுவது இதுவே. எல்லாமக்களுக்கும் ஏற்றபுடைய மதத்தை எனக்கு அருளும். உம்மை நாடும் அறிவுடைய ஆசையைத் தருவதும் உண்மையை ஆதாரமாக உடையதும், நடுவு நிலைமை தவறாததுமான மதத்தை எனக்குக் காட்டி அருளும்.

(ஜாரதுஷ்டிரமதம்)



கடவுளே! உலக நாயகனே போற்றி, கருணாமூர்த்தியே போற்றி, இறுதி நாளில் தீர்ப்பளிக்கும் இறைவனே போற்றி, உன்னையே வணங்குவோம். உன்னையே உதவி அருள அழைப்போம், நேரான வழியைக் காட்டும். உம்முடைய அடியார்கள் சென்ற அறநெறியைக் காட்டும்!

நான் மனிதனுக்கு நன்மை செய்யும் போது என்னிடம் வருவதில்லை தீமைவந்தால் அப்போது நீண்டநேரம் பிரார்த்தனை செய்கிறான்,

மனவுறுதியுடன் பிரார்த்தனை செய், பிரார்த்தனை செய்பவர் பிழை செய்யலாகாது.

அல்லாவே! உடல்நலத்தையும், பத்தினி தர்ம விரதத்தையும், உன்னிடம் நம்பிக்கையையும், நற்குணத்தையும், உன்கட்டளைப்படி நடக்கும் இயல்பையும் எனக்கு அருளும்.

(இஸ்லாமிய மதம்)

கடவுளை நோக்கி வணங்குவதும் பிரார்த்திப்பதும் குறையிரப்பதும்வெறும் மூடநம்பிக்கையல்ல. உண்பது, பருகுவது போன்ற காரியங்களைவிட அவையே உண்மையான காரியங்கள். அவைதான் உண்மை. மற்றவையெல்லாம் உண்மையில்லையென்று கூறினால்கூட உயர்வு நவிற்சியாகாது.

தவறான குணங்களை அகற்றி மனத்தைத் தூய்மை செய்வதற்குப் பிரார்த்தனையைவிட அதிக நிச்சயமான சாதனம் வேறு கிடையாது. ஆனால் அந்தப்பலன் வேண்டுமானால் அதனுடன் பரிபூரண பணிவும் தேவையாகும். ஆகாரமில்லாமல்கூட பல நாள் வாழமுடியும். ஆனால் பிரார்த்தனையில்லாமல் அரை விநாடிகூட வாழமுடியாது. ஏனெனில் பிரார்த்தனை யில்லாவிட்டால் மனச்சாந்தி கிடையாது.

அரசியல் வாழ்வில் எத்துணை தோல்வி நேர்ந்தகாலத்தும் நான் மனத்தில் சாந்தியை இழந்ததில்லை. அதற்காக என்னைக்கண்டு அழுக்காறு கொண்டவர்களும் உண்டு. ஆனால் அந்தச்சாந்தி எனக்குப் பிரார்த்தனையினாலேயே கிடைத்ததாகும்.

இதயத்தில் கடவுள் இருப்பதாக உறுதியான நம்பிக்கை இல்லாதவர் பிரார்த்தனை செய்ய முடியாது.

இதயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளத் தீர்மானித்துக் கொண்டால் இறைவன் பிரார்த்தனையைக் கேட்காமலிரான். ஆனால் ஆணவமுள்ளவருடைய பிரார்த்தனையையும் பேரம்பேசுபவருடைய பிரார்த்தனையையும் அவன் ஒருநாளும் கேட்பதில்லை.

(காந்தி)

---

ௐ

# பிரம்மச்சரியம்

—(ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்கள்)—

**பி**ரம்மசரியம், உன்னை மகோன்னத நிலைக்கு உயர்த்தும் ஜீவகமணி. நிகரற்ற ஆத்ம சாந்தியின் அரசனாக வாழவைக்கும் மணிமகுடம். செல்வம் கொழிக்கும் ஸ்பர்சக மணி. தெய்விக வாழ்வின் பொன்னொளி. இம்மஹா விருத்தத்தின் அரியணையில் அமர்ந்திருந்து குறைவில்லா ஆத்ம சுகத்தை தேன்மதுபோல் உண்டு மகிழ்.

**அ**ன்பனே! வாழ்வில் அடிக்கடி சம்பவிக்கும் படுதோல்வியின் காரணம் நீர் அறிவீரா? ஆழ்ந்து சிந்தனை செய்ததுண்டா? இல்லை, வெற்றியின் இரகசிய தத்துவமான வீரிய சக்தியை அபரிமிதமாக துஷ்பிரயோகம் செய்கின்றீர். உமது தோல்வியின், அல்லது துக்கத்தின், அடிப்படையான தத்துவம்இதுவே. எவனொருவன் பிரம்மசரியத்தினால் "தாதுவை"க் கட்டுப்படுத்தி ஓஜஸ்ஸாக மாற்றிவிடுகிறானோ, அவனிடமே புலனடக்கம், உற்சாகம், வீரம், உறுதி முதலிய அரும்பெருங் குணங்கள் பெருகிக்காணப்படுகின்றன. வலிமைமிக்க இப்பெரும் சக்திதான் உம்மை ஆனந்த சொரூபியாக மாற்ற வல்லது. இம் மகல் சக்தியே, ஓஜஸ், தேஜஸ், பேரறிவு, ஆற்றல், ஆனந்தம் அத்தனையும். இப்பரமரகசியம் உணர்ந்து செயல்படுத்துவாயானால் நீயேதீரன், நீயே ஆத்ம சாந்தியின் இளவரசன். வலிமைமிக்க அர்ச்சுனனைப்போல், தர்மம் மிக்க தர்மனைப்போல், இவ்வுலகில் நிச்சயம் விளங்குவீர்.

*"யாவதிபிந்து, ஸ்திரோ, தேஹே, தாவல், காலபயம்குதா"*

அதாவது, விந்துவை உடலில் உறுதியுடன் சேமித்து வைத்துக்கொண்டிருப்பவர்கள் யமனுக்குக்கூடப்பயப்படவேண்டியதில்லை என்று யோகசாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால்உன் உடல் மனோநிலைகளென்ன? அதில் வலிமையும், வனப்பும் எங்கே? தெளிந்த புத்தியும் உறுதி பெற்ற உள்ளமும் எங்கே? உனக்களிக்கும் யோக, போக சுகங்களை முறையாக அனுபவிக்கத்தக்க பலம் உன்னிடம் இல்லாவிட்டால் நீ இவ்வுலகில் இருப்பதனால் பிரயோசனம்என்ன? ஆண்டவன் கருணையுடன் அளித்த வீரிய பலத்தை அஸ்தானத்தில் செலவழித்து பரிதாபத்துக்குரியவனாக வாழ்ந்து கொண்டிருக்கின்றாய். நடைப்பிணம்போல் ஆனாலும் கலங்காதே! செல்வனே! மோகவலையில் நின்று விழித்தெழும்புக! ஈடு இணையற்ற பிரம்மச்சரிய மகாவிரதத்தை இனியாவது உறுதியுடன் மேற்கொள். உன் ரேதஸ்ஸால் அனேகம் ஜீவர்களை ஈன்றெடுத்து விட்டாய். போதும் நிறுத்திக்கொள். மிகுதியானதை உமது ஆத்மீய வாழ்வுக்காகச் சேமித்துவை. கிடைத்தற்கரிய இப்பெருஞ் செல்வத்தை இழந்துவிடாதே. நீ தேடத்திரியும் அத்தனை இன்பங்களும், குறைவற்ற செல்வமும் இப்பெரும் பொக்கிஷத்தில் நின்று தடையின்றி பெற்றுக்கொள்.



*"மரணம் பிந்து பாதேன ஜீவனம் பிந்துதாரணால்"*

**வி**ந்துவை இழந்து விடுகின்றபடியால் மரணமும், விந்துவைச் சேமித்து வைக்கிறபடியால் மரணமில்லாப் பெருவாழ்வும் சித்திக்கின்றன. ஆதலால் மணமாகாதவர் பூரணமாகவும் மணமானவர் மிதமாகவும் இம் மஹா விரதத்தை அனுட்டானத்தில் கொண்டுவாருங்கள். இதன் எல்லையற்ற மகிமையால் வேதனைகளும் துயரமும் நிறைந்த நிகழ்ச்சி நிரலில்நின்று நிட்சயம் விடுதலை பெறுவாய் ஐயமுறாதே! ஒப்பற்ற மனோவலிமையும் குறையாப் பேரின்ப நிலையும் உனது பிறப்புரிமை. இதை இவ்விரதத்தால் அடையச்செய்! இதன் மேலாம் மகிமையை நீ அறிந்து அனுபவிக்கும் பட்சத்தில், துக்கத்தைத் துடைத்தெறியும் உயர்ந்தயோக நிலையும், அந்நிலையால் எய்தும் நிகரற்ற ஆத்மசாந்தியும் பெற்று இம்மையிலும் மறுமையிலும் பிரகாசமுள்ள ஜீவனாக விளங்குவீர். உயர் ஜீவனே! இப் புஷ்பக விமானத்தில் அமர்ந்திருந்து சாந்தியுலகில் உல்லாசப்பிரயாணம் செய்.

மகிழ்வுடன் இவ்வுலக வாழ்வைப் பூரணமாக்குக. அமரனே இன்றுமுதல் உனது அருச்சனை, வழிபாடுகள் அத்தனையும் பிரம்ம சர்ய மகா தேவதைக்காக அர்ப்பணம் செய். இதை வழிபடு, தியானி. இப்பெரும் சைதன்ய சக்தியின் மகிமையால் நீ உனது ஆத்மாவை அறியக்கூடும். அதில் லயித்திரு. விச்ரம் கொள். ஹே! ஸ்ரீ ராமச்சந்திரா! உனது திருவருளால் ஜீவர்கள் இப் பெரும் நிலையை அடைவார்களாக.

**ஓம் தத் ஸத்.**

---

## ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம.

*(ப்ரூஹி முகுந்தேதி என்ற மெட்டு)*

ராமகிருஷ் ணாயந மோ, - ஓம்ஸ்ரீ
ராமகிருஷ் ணாயந மோ. ஜய (ராம)

காமினி காஞ்சனக் கட்டற்ற வா நமோ,
தூமணி சாரதா சுகுன பதே நமோ. (ராம)

வீர நரேந்திராதி வித்தக ஓம்நமோ,
பூரண அவதார புருஷ நமோநம. (ராம)

பாரத ஞானபொற் பாஸ்கர ஓம்நமோ.
தாரணிக் கவதாரம் தாங்கிய வா நமோ (ராம)

ஞானப்ர பாகர தியான பராபர,
மோனசர் வேசுர ஆனந்த சாகர (ராம)

சக்தி உபாசக தண்ணருள் வாசக,
எத்திசை யும்புகழ் இனிய பரமஹம்ஸ (ராம)

—பரமஹம்ஸதாசன்



# சமயப்பண்பாட்டினை மறவாதீர்!

(முருவேள் எழுதியது)

சமயத்தை மனிதனின் உடலிற்கு ஒப்பிடுவோமானல் அதன் பண்பை இரு பாதங்கட்கு ஒப்பிடலாம். அதன் சீலம் கரங்களாக அமையும். வழிபாடு இதயமாக நிற்கும். அதன் சித்தாந்தம் சிரமாகத் தோன்றும். உடலின் கீழ்ப்பாக உறுப்புகள் பாதங்களாகும். இவைகளின் துணைகொண்டே உடம்பு உலாவுகிறது. பண்பு இல்லாவிட்டால் ஒரு சமயமும் உலகில் வளரமாட்டாது. கிரிகைகள், திருவிழாக்கள், நம்பிக்கைகள், பூசைகள், பிரார்த்தனைகள் ஓர் சமயத்தின் பண்பில் அடங்கும். இளமையிலே சூரிய பொங்கலைப் பார்த்திருக்கின்றோம். அதிகாலையில் எழுந்து வீட்டைப் பெருக்கி, மெழுகித் தூபதீபமேற்றி முற்றத்தில் கோலமிட்டுக் குத்துவிளக்கேற்றிப் பூரண கும்பம் வைத்துச் சாணத்தில் பிள்ளையார் பிடித்துப் புதுக்கலயத்தில் பொங்கிச் சூரியபகவானுக்கு நைவேத்தியஞ் செய்கின்றோம். துலக்கிய வெள்ளிக்குடம், பன்னீர்ச் செம்பு, சந்தணக்கும்பா, கற்பூர விளக்கு, மலர்த்தட்டம் ஆகிய பூசைப் பாத்திரங்கள் நாற்புறமும் சூழ்ந்துகிடக்கக் குளித்துத் தோய்த் துலர்ந்த வஸ்திரந்தரித்துத் திரிபுண்டரமாகத்திருநீறு அணிந்து, வானத்தில் எழும் அருட்சோதியை வண்ணமலர் சொரிந்து ஒருவர் வணங்குவதைப்பார்க்க முன்னென்றும் கண்டிராத ஒருசிறுபிள்ளைக்குப் பெரும் நூதனமாகத்தானிருக்கும். வருஷமொருமுறை வருகிற இந்தப் பொங்கல் தினமும் வந்தால் என்ன என்று நினைக்கவுங்கூடும்! ஆனல் இந்தப் பொங்கல் விழாவைக் கண்டபிறகுதான் இந்தச் சிறுபிள்ளையின் மனதிலே இவ்வழிபாட்டை ஏன் செய்கிறர்கள்? சர்க்கரைப் புற்கையும் கரும்பும் தின்பதற்கு மாத்திரமா? அல்லது இதற்கு மேலானதும் ஓர் நோக்கம் இதில் உண்டா? என்ற விசாரம் உண்டாகிறது. இந்த விசாரமே காலப்போக்கில் அப்பிள்ளைக்குச் சமயப்பண்பை எடுத்துக்காட்டுகிறது. எந்த நாட்டிலும் எந்தச் சமயத்திலும் சமயப்பண்பு அனுஷ்டிக்கப்படாமலில்லை.

நெல்லின் உமியைப்போன்றது சமயப்பண்பு. உமியை நீக்கிவிட்டால் நெல்முளைக்கமாட்டாது. வயலில்சாகுபடிசெய்ய விதைக்கும் விவசாயி அரிசியை விதைப்பதில்லை. நெல்மணிகளைத்தான் விதைபபான். சமயப்பண்புதான் சமயத்தைச் சமூகத்தில் வளர்த்து வருகின்றது. ஒலிக்குறிப்புகளின் திரட்சி மனிதத் தொகுதியிடையே ஆட்சி செய்யத்தொடங்கிஎவ்வாறு ஒரு பாஷையைச்சிருஷ்டிக்கிறதோ அவ்வாறே சமயத்திலுள்ள நம்பிக்கைகளும் கலாசார வைபவங்களும் மனிதசமூகத்திலே விசுவாசத்தையும் அன்புப்பிணிப்பையும் ஆத்மீக வளர்ச்சியையும் கொண்டு வருகின்றன. தினமும் மக்கள் கோயில்களிலும், தேவாலயங்களிலும், தாது கோபங்களிலும் பள்ளிவாசல்களிலும் கூடிநின்றுபிரார்த்தனை செய்வதும்பூசைவிழாக்கள் கிரியைகள் நடாத்துவதும் இதற்குப் பொருந்திய எடுத்துக்காட்டுகளெனலாம். மனித சமூகத்தைத் தொகுதி தொகுதியாக ஒரே சீலத்தில் கோத்துவிடுவது மட்டுமல்லாமல் சந்ததி சந்ததியாக அச்சீலத்தை வளரச்செய்து ஒருசாதியின் ஒற்றுமைக்கும் வழிவகுக்கின்றது. இதனால் திரிகாலங்களிலுமே மனிதன் ஒரேசமயப்பண்பில் நின்று ஈடேற வழியுண்டாகிறது.

தெய்வபக்தியுள்ள ஓர் சைவசமயி வாழ்வில் ஒருமுறையாவது காசியாத்திரைசெய்து கங்கையில் திருமுழுக்கிட்டுத் தனது நம்பிக்கையைப் பூர்த்திசெய்ய ஆவல்கொள்கிறன். தெய்வநம்பிக்கையுள்ள ஓர் புத்தசமயி, புத்தன்பிறந்து, ஞானவொளி பெற்று, நிர்வாணமடைந்த திருத்தலத்திற்கு ஒருமுறையாவது யாத்திரைசெய்ய விரும்புகிறன். இவற்றால் சமயப்பண்பு எவ்வளவு சரித்திரப் பிரசித்திபெற்றதென்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம். இப்பண்புகளைப் பாதுகாப்பதும் அனுஷ்டிப்பதும் எங்கள் பூர்வீக செல்வத்துக்குப் புகழை ஊட்டுகிறது.

மனிதனின் சிந்தனையில் எழும் ஒவ்வோர் உணர்வும் வெளிப்பட்டு அனுபூதிவயப்படுவதற்கு ஓர் வாயிலை நாடும். உவகை எழும்பொழுது மனிதன் சிரித்து ஆனந்தங்கொள்கிறன். துக்கம் எழும்பொழுது அழுது கண்ணீர் விடுகிறன். இவ்விதமே சமய உணர்வு மனிதன் உள்ளத்தில் எழவே பூசைகள், கிரியைகள் முதலிய தூய கைங்கரியங்களைச் செய்கிறன். 'சம்பிரதாய முறைப்படி இவ்வழிபாட்டைச் செய்து முடித்ததனால் எனது மனம், வாக்குக், காயம் பரிசுத்தமடைந்ததுடன் எனது ஆத்மாவும் தூய்மையடைந்தது' என்ற மனச்சாந்தியை ஒருவனுக்குச் சமயப் பண்பாடு வழங்குகின்றது



சமயப்பண்புமூலம் கலையும் வளர்ந்து வந்ததை பற்பல நூற்றாண்டுகளாக நாம் காண்கிறோம். தென்னிந்தியாவிலுள்ள இந்துக் கோவில்கள், அக்ராவிலுள்ள மசூதிகள், மேலைத்தேயங்களிலுள்ள தேவாலயங்கள் சமயக்கலையின் பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன.

சமயப்பண்பு மூலம் சீலத்தையும் வளர்க்கலாம். விரதங்கள், அனுட்டானங்கள், சமயக்கோட்பாடுகள் என்பன மனிதனின் தீயஅவாக்களையும் இச்சைகளையும் ஒடுக்கி மனத்தை ஒரேவழிப்படுத்தக் கையாளும் பயிற்சிகளாகும். இவைகள் வீடுபேற்றிற்கு முதற்செய்யும் சிகிச்சையாக ஆத்மாவிற்கு அமைகின்றன.

எமது அன்றாட வாழ்வில் சமயப்பண்பு அற்றுப்போகாது பேணிக்கொள்வதற்கு அத்திவாரமாகவே சமயநூல்கள் காலத்திற்குக்காலம் தத்துவஞானிகளால் செய்யப்பட்டு வருகின்றன. சமயப்பெரியார்கள் எம் சமூகத்தில் அவதரித்துச் சாமானிய மனிதர்போல் வாழ்ந்து ஆக்கினைகட்குள்ளாகி அல்லற்பட்டபோதும் பண்பைக்கைவிடாது இறுதிவரை தலைமேற்கொண்டு வாழ்ந்து வழிகாட்டிப் போவதையும் அவதானிக்கின்றோமல்லவா?

சைவப்பண்பு ஈழத்தில் ஆதிகாலந்தொட்டே ஆட்சிபுரிந்து வந்திருக்கிறது. விசேடமாக யாழ்ப்பாணத்தில் தொன்றுதொட்டு இருந்துவருகிறதென்று சொல்லலாம். நல்லூரில் திருவவதாரஞ்செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவநன்னெறி, பிரகாசிக்கத் தமது வாழ்வை அர்ப்பணஞ்செய்த பெருமான். சைவ உலகம் முழுதும் என்றும் இவரை சைவப்பண்பிற்கு உதாரணபுருஷனாகஎடுத்துக்காட்டத்தவறமாட்டாது மறுசமயங்களைப்புறக்கணிக்காது கற்றுக்கொண்டு சைவசமயத்தைவளர்க்க அரும்பெரும் நூல்கள் செய்து தனது வாழ்விலும் அதனைக்கிரியாம்சத்தில் அனுட்டித்துக் காட்டிய சீலர் என்றால் சாலவும் பொருந்தும். 'யாழ்ப்பாணம் ஆறில்லா ஊர்' என்று பிறர் கூறி நகைப்பர். நாவலர்பெருமான் எழுப்பிய சீலமலையினின்றும் உற்பத்தியாகி ஓடிக்கொண்டிருக்கும் சைவப்பண்பென்னும் வற்றாஆறு சமயப்பயிரையும் தமிழ்ப்பயிரையும் என்றென்றும் வளர்த்துவரும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இச்சிவநெறிச் செல்வரின் திருவடிச்சுவடுகளைப் பின்பற்றித் தோன்றிய பல சைவப் பெரியார்கள் சைவப்பண்பைக் காத்து வந்திருக்கின்றனர். திரு. சு. சிவபாதசுந்தரம், திரு. க. சோமசுந்தரப்புலவர், பண்டிதர். வே. திருஞானசம்பந்தர் முதலிய பேரறிஞர்கள் ஆங்கிலங்கற்று உத்தியோகம்பார்த்தபொழுதும் சைவ சீலத்தைக் கணப்பொழுதும் மறந்ததில்லை,

தமிழ் நாட்டில் பிறந்தவர்கட்கு ஓர் தெய்வ ஆசீர்வாதமோ என்னவோ ஆங்கிலத்தில் எவ்வளவுதான் கல்விகற்றுப்பட்டங்கள் பெற்று உயர்ந்த அரசாங்க பதவிகளை வகுத்தபோதும் சமய சீலத்தை ஒரு நாளும் கைவிட மாட்டார்கள். இந்தியாவின் முதல் பிரதம தேசாதிபதியாய் விளங்கிய ஸ்ரீ. இராசகோபாலாச்சாரியார், திருவிதாங்கூர் உயர்தர நீதிமன்ற நீதிபதியாயிருந்த பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாமி ஐயர் முதலியோர் இக்கூற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டெனலாம்.

ஈழத்திலே இப்பொழுது நிலைமை இப்படியல்ல. சைவ சமயத்திலே பிறந்து வளர்ந்த பொழுதும் ஒருவன் ஆங்கிலம் கற்றுப் பட்டம்பெற்று கால்சட்டை தொப்பி அணிந்து பெரிய உத்தியோகம் பார்க்கத் தொடங்கிவிட்டால் எல்லாம் வேறோர் பண்பு மயமாகிவிடும். அத்தத் தனிப்பண்பை ஆராய்ந்து பார்க்கின் அது ஆங்கிலமுமன்று சைவமுமன்று. அனேகமாக நிலைமை இப்படியிருப்பினும் இலைமறை காய்போல் பல சைவப்பெரியார்கள் அரசாங்க அதிகாரபீடத்திலோ வேறெந்த உயர்ந்த பதவிகளிலோ இருந்தபொழுதும் ''நான் ஓர்சைவசமயி எனது சமயப்பண்பாட்டிற்கு முரணுருது நான் வாழுதல் வேண்டும்'' என்ற மனவைராக்கியத்துடன் வாழாமலில்லை. இப் பெரியார்களை மற்றைய உத்தியோகத்தர்களும் அவர்களின்கீழ் உள்ளோரும் பின்பற்றுவார்களாக.

✠✠✠✠

## துணுக்குகள்

பற்றற்ருல் பந்தம் ஒழியும். பிறவிப்பிணியறும். பற்று நீங்காது போனல் மனம் நிலையாமல் திரிந்து பந்தங்களைப் பெருக்கும்; பிறவிநோய் விடாது பற்றும். ஜீவாத்மாக்களுக்கு ஒரே பற்றுத்தான் உண்டு. அதுவே எப்பற்றுமில்லாத பரமாத்மா. அவனையே பற்றுக.



# அகச்சாதனங்களும் புறச்சாதனங்களும்

(வ. சின்னத்தம்பி)

மனித வாழ்வு இருவகையான சாதனைகள் மூலம் இயங்குகின்றது. ஒன்று மனிதன் தோன்றிய காலம் தொட்டு மனித சமுதாயம் இருக்கும்வரையில் மாற்றமின்றி நடைபெறுவது. மற்றயது காலமாற்றத்தின் மூலம் வேறு வேறு கருவிகளைக் கையாண்டு வாழ்வு நடத்துவது. இந்த இருவகை சாதனை மூலமே மனிதசமுதாயம் வாழ்ந்து வருகின்றது.

உண்ணுவது, உறங்குவது, உடுப்பது, குளிப்பது, மலசலங்கழிப்பது இப்படியாக இன்னும் சில நியதிகளைத்தாங்கி நடப்பது அகச்சாதனங்களாகும். எந்த விஞ்ஞானயுகத்தை மனிதன் கண்டுபிடித்த காலத்திலும் இந்த நியதிக்கருமங்களில் மாற்றமுண்டாக முடியாது. இவைகளை அனுசரித்து நடவாமல்வாழவே முடியாது. ஆனல்! ஒன்று மட்டும் உண்மை. காலத்திற்குக்காலம் நுட்பமான சுவையுணவுகளை சமையல்செய்து கொள்ளலாம்; உண்ணுகின்ற நியதியில் மாற்றமில்லை. பாய்க்கந்தலில் நித்திரை செய்தவன் பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கலாம். உறக்கத்தில் பேதமில்லை. கதர்வேஷ்டி கட்டியவன் கஷ்மீர் பட்டுமுடுக்கலாம். எல்லாம் மானத்தைக் காப்பதற்குள்ள உடைதான். கிணற்றில், குளத்தில் குளித்தவன் ஆற்றுநீரில் குழாய்த்தண்ணீரில் குளிக்கலாம். ஸ்நானம் என்பது தேக சுத்தம் செய்து சுகாதாரமாக வாழ்வதற்கேயாம். கட்டாந்தரையில் மலசலங் கழித்தவர்கள் மலகூடம் (கக்கூஸ்) சென்று கழிக்கலாம். ஆனல் மலசலங்கழிப்பதில் மாற்றமில்லை. இப்படியாக நமது வாழ்க்கையில் பலகாலமாற்றக் கட்டம் ஏற்பட்டாலும் நமது நித்திய கர்ம விதிகளில் மாற்றம் ஏற்படவில்லை என்பது வெள்ளிடைமலை. இன்னும் இந்த நித்திய கர்ம விதிகளில் நாம் கவனித்து செய்கின்ற, செய்யவேண்டியவை பலவுள. அவைகள்தான் நமது வாழ்க்கையில் அமைந்துள்ள அகச்சாதனங்களாகும்.

புறச்சாதனங்களாவன காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே போகும். அம்மாற்றங்களை அனுசரித்து நாமும் வாழத்தான் வேண்டும். மாற்றங்கள் ஏற்பட்டாலும், குறிக்கோளாக உள்ள இலட்சியம்

116-ம் பக்கம் பார்க்க

# மயக்கிடும் மனிதன் மர்மம்

(செல்வி C. மதார் நாச்சியா)

மனதினிலே வாழுகின்ற மனிதன் அதன் மர்மத்தை விளங்காது மயங்குகிறான். நித்திய இன்பத்திலே நிலைத்திருக்க வேண்டிய மனிதன் இதயத்தின் தடுமாற்றத்திலே தத்தளித்துத் தயங்குகிறான். நாளை சாகின்ற மனிதன் ஆசைக்கண்கொண்டு பல கனவுகள் காண்கிறான். விரியும் மனதின் விசாலத்தைக்கண்டறிய முடியாதவன் அசைவின் வீச்சலுக்கு ஆக்கம் தேடுகிறான். எல்லாம் வியப்பாகவே இருக்கிறது. ஆச்சரியம் நிறைந்த இவ்வையகம் அமைதியிழந்து ஆடுகிறது. காணுகின்றகாட்சி, ஆடுகின்ற ஆட்டம், யாவும் மனதின் மாயக்கண்ணாடியின் நிழற்படம்.

மகிழ்ச்சியின் வேகத்திலே ஆடுகின்ற கூத்து, துக்கத்தின் சுமையினிலே தயங்குகின்ற கலக்கம். ஆசையின் ஏக்கத்திலே ஏங்குகின்ற ஏமாற்றம், யாவும் தூங்குகின்ற போதினிலே துலங்கிடும் கனவுபோல்தான் ஜாலம் நிறைந்த மனத்திரையில்காண்கிறது.

சாவினிலும் வாழ்வினிலும் சம்பந்தப்பட்ட மனிதன் வாழ்வில் மட்டும் ஆசையாகிறான், ஆகவே நீழுகின்ற நினைப்பினிலே நித்தம் நித்தம் ஏமாறுகிறான். வாழுகின்றபோதே சாவையும் சுவைக்கவேண்டும். ஆசையின் வெப்பத்திலே வேகுகின்ற மனம் துயரப்பாதையிலே தூண்டிச்செல்லும் பயங்கரப் புயலாகும்.

மனிதன் மனதிலே நிகழும் எண்ணங்களை முற்றிலும் விளங்காத வரை ஆசையின் வெறியிலே மாய வேண்டியதுதான். ஏனெனில் எண்ணத்தில் – நினைப்பில் ஆசைகலந்த உணர்ச்சியும் கலந்தே இருக்கிறது. பூர்த்தியாகாத அனுபவத்தின் விளைவுதான் ஆசையாக மாறுகிறது. எண்ணங்களின் சங்கிலித் தொடர்பில் சிக்கும் வரையில், வாழ்க்கையில் சாந்திகாண முடியாது. ஏனெனில் எவன் எண்ணத்தை ஆராய்ச்சி செய்கிறானோ அவனே அந்த எண்ணத்தின் பிரதிபலிப்பால் பாதிக்கப்படக்கூடும் ஆகவே எண்ணங்கடந்த இடத்தில்-



தான் மனதின் முழுத்தன்மையையும் உணர முடியும். எல்லாச்சந்தர்ப்பத்திலும் மனதிலே நிகழும் ஒவ்வொரு ஆசையையும் ஒழுங்காக அறிந்தால்தான் தினசரி வாழ்வில் அமைதிகாண முடியும்.

எதிலும் ஆசை வையாதே. ஆசையை உருவாக்குவது கற்பனையாகிய மனமே. மனதின் செயல்களைக்கொண்டு நிகழுகின்ற அனுபவங்கள் யாவும் பூர்த்தியாகாத ஆசைகளின் வெளித்தோற்றம். மனிதன் எண்ணத்தின். ஆசையின் சாயலிலே நிலைத்து நிற்கும் வரையில் சுதந்திரம் கிடையாது. மயங்குகிறான் மனிதன் மரண பயத்தால். மனம் இருக்கும்வரையில் சாவின் பீதியும் அச்சமும் இருந்துகொண்டே இருக்கும். ஆசைகளில் வாழும் வரையில் துன்பங்களும் வாழ்க்கையில் இருந்துகொண்டே இருக்கும். ஆசையின் மறுபெயர் துன்பம். ஆசையின் முடிவிலே காணப்படுவது யாவும் ஏக்கமும் ஏமாற்றமுமே யாகும்.

இவ்வுலக வாழ்வு நிலையற்றதுதான். ஆனாலும் குழப்பமும் துக்கமும் தொடர்ந்துவரும் இவ்வாழ்விலேதான் நிலையான சுகவாழ்வு பெறுவதற்குரிய தகுதியைப் பெறவேண்டியிருக்கிறது. இவ்வுலகம் இன்பமும் துன்பமும் நிறைந்த மிக ஆச்சரியமான இடம். அறிவைக் கலக்கிடும்பல அபூர்வக்காட்சிகள் இவ்வுலகில் காணப்பட்டாலும் நினைவின் ஆக்கத்தால்தான் உலகம் உண்மைபோல் உணர்ச்சிமயமாகத் தோன்றுகிறது. எல்லாம் எண்ணங்கள் மயம், எண்ணங்களற்ற இடத்தில் இவ்வுலகமும் அதனால் நிகழும் இன்ப–துன்ப ஜாலங்களும் இல்லை.

# துணுக்குகள்

உயிர் அனைத்தும் ஒரே தன்மையன என்ற உபநிடதக் கோட்பாட்டை இன்று நவீன பௌதிக சாஸ்திரம் நிரூபிக்கின்றது. பேரன்புக்குச் செடிகொடிகள் வசப்படுகின்றன என்பதைக் கண்கூடாகக் காணலாம். கல்லும் அன்புக்கு இணங்குவதைப் பிரத்தியட்சமாகக் காட்டும் காலம் சீக்கிரமாய் வரும்.

**113-ம் பக்கத் தொடர்ச்சி**

மாறுவதில்லை. உதாரணமாக கதிர்காமயாத்திரை போவதற்கு கால் நடையாகப்போனகாலம் உண்டு. பின்னர் வண்டிகள், பஸ், ரயில் இவைகள் மூலம் பிரயாணம் ஏற்பட்டது. இனி ஒருவேளை விமான மூலமும் போகலாம். ஆனால்! கதிர்காம யாத்திரை சென்று இறைவனை வணங்கும் இலட்சியத்தில் மாற்றம் ஏற்படமாட்டாது. மேழிச் செல்வம் கோழைபடாது என்ற மூதுரைப்படி உழவுத்தொழில் மாடுகள் மூலம் நடத்திவரும் வேளையில் யந்திரக்கலப்பைகளும் வந்து மாற்றம் ஏற்படுகின்றன. மாடுகள் மூலமோ! யந்திரம்மூலமோ நடத்தும் உழவுத்தொழில் விவசாயம் செய்வதற்கே என்ற ஒரே குறிக்கோளைக் கொண்டே நடைபெறுகின்றது. தெருக் கூத்து, நாடகமாகமாறி சினிமாவாகவும் மாறிவிட்டது. இவைகள் மனிதன் களியாட்டத்தில் காலம் கடத்த ஏற்பட்ட ஒருகுறிக்கோளாகவும் விளங்குகின்றது. இதுபோன்று பல்வேறுவகையில் மனித நாகரீகம் பலபுறச்சாதனங்களை உண்டுபண்ணிய காலத்தும் மனிதனது அகச்சாதனங்களுக்கு உதவியளிக்குமேயன்றி அகச்சாதனங்களுக்கெதிராக எதையும் செய்ய மாட்டாது. எழுத்தாணிகொண்டு ஓலையில் எழுதிய எழுத்துக்கல்வியைத்தான் இன்று கடதாசியில் ஊற்றுப்பேனமூலம் எழுதும் அளவில் நாகரீகம் மாறியது. எழுத்தில் மாற்றமில்லை. இவைகளை நாம் ஏன் ஆராயவேண்டும்?

கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத்தலை என்றும், கற்றதனாலாய பயன் என் கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின் என்றும் வள்ளுவர் கூறிய தெள்ளிய வாசகத்தின் தன்மையை நாகரீகம் என்ற ஒரு கண்ணாடியைப் போட்டவுடன் சிலர் மறந்துவிடுகின்றனர். அதற்காகவே முன்கூறிய உதாரணங்களை நினைவு படுத்தினேன்.

மணிக்குப் பதினெண்ணாயிரம் மைல் வேகத்தில் பறக்கும் செயற்கைச் சந்திரனை கண்டுபிடித்த இந்த இருபதாம் நூற்றாண்டிலுமா? கடவுளைப்பற்றிப் பேசவேண்டும் என்று சில நாஸ்தீகக் கல்வி முன்னேற்றம் கண்டவர்கள் முணுமுணுக்கின்றனர். ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சியாளரோ, செயற்கைசந்திரனை மட்டுமல்ல! சந்திரமண்டலம் மற்றய கிரகமண்டலங்கள் செல்ல ஆராய்ச்சி நடத்துகின்றனர்-இந்த விஞ்ஞானத்தின் முடிவுகூட இறைவனைக்காணும்படியாக உள்ள ஒரு முடிவுக்கே நாளடைவில் வரும் என்று இலங்கைவிஜயம் சுற்றுப்பிரயாணத்தின் போது வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் சுவாமி சுத்தானந்தபாரதியார் அவர்கள் கூறினர். மேலும் இங்கு அவர்கூறிய பாடலில் ஒருவரியில் வரும் நுட்பமான கருத்தையும் நோக்குவோம்.



...உலகினையே யுத்தகளமாக்கிவரும் அரக்கர்கூட்டம்
கூண்டோடுமாளவேண்டும் உயர்விஞ்ஞானம்ஓங்கவேண்டும்-

என்று ஒருபாடல் வரியிலும் கூறினர்.

ஆகவே விஞ்ஞானிகள்கூட தமது ஆராய்ச்சிகள் மூலம் இறைவனை எதிர்க்கவில்லை. மார்கழி மாதம் திருவாதிரை இந்துமக்களின் வழிபாடு நாட்களில் சிறந்த ஒரு திருநாள் என்பது யாவரும் அறிந்த உண்மை. இந்த நியதியை இந்துசமயம் ஆரம்பத்திலிருந்தே திருவாதிரை நட்சத்திரத்தின் பெருமையை உணர்ந்து மதித்து வழிபட்டனர். ஆனால்! இன்று விஞ்ஞானிகள் திருவாதிரை நட்சத்திரம் சூரியனைக் காட்டிலும் இரண்டரை மடங்கு பெரியது. அது மிகத் தொலையில் இருப்பதால் சிறியதாகவும் ஒளிதருவதில் சூரியனில் குறைவாகவும் உள்ளது என்று கூறுகின்றனர். ஆகவே விஞ்ஞான ஆராய்ச்சிகூட நமது சமயதத்துவ வளர்ச்சியை நாளடைவில் உணர்ந்தே வரவேண்டிய நிலை ஏற்படும்.

இதனாலன்றோ! விவேகானந்தரும் மேல்நாட்டான் சமயத்தைப் பற்றியோ! ஆண்டவனைப்பற்றியோ! அறியவேண்டுமானால் நம் நாட்டான் காலடியில் (பாரதநாட்டின்) வந்து கற்கவேண்டும் என்றும், அதேவேளையில் யந்திரசாதனங்களைப்பற்றி அறியவேண்டுமானால் நாம் மேல்நாட்டான் காலடியில் சென்று கற்கவேண்டும் என்றும் கூறினர்.

இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் நடத்துகின்ற சாதனைகளைத் தாயுமான சுவாமிகள் சுமார் 300 ஆண்டுகள் முன்பாகவே கண்டுபிடித்து **கந்துகமதக்கரியை வசமாய் நடத்தலாம்**... என்ற பாடல் மூலம் விளக்கி அதன் கடைசிவரியில் **சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது**... என்றும் விளக்குகின்றார். விஞ்ஞான ஆராய்ச்சி நடத்துவோர்களுக்கு அமைதியான தனியிடம் வேண்டும். அதேபோல் **பக்திவலையில் படுவோன் காண்க**, என்ற மணிவாசகர் வாக்கின்படி சிந்தையை அடக்கி இறைவனை அறிந்த மெய்ஞானிகள் இறைவன் நமக்கும் தங்கள் திருவருள் பாடல்கள் மூலம் நமக்குக் காட்டுகின்றனர். ஆகவே கல்வியின்பயன் கடவுளை மறவாது வழிபட்டு வாழ்ந்து மற்றையோரும் வாழ இறைவனை வேண்டுவீர்.

# நாமதேவர்

(சாரதை)

நாமதேவர் பகவான் கொடுத்துப் போன வராகன்களைக் கண்டு ஆனந்தங்கொண்டு இனி பக்தர்களுக்குத் தொண்டுசெய்தால் இன்பமுண்டு எனவுணர்ந்து சாதுக்கள் ஏழைகட்கு அன்ன தானங்கொடுத்து வந்தார். முன்போலவே இருந்த பொருள்களெல்லாம் தீர்ந்து பழைய நிலை வந்தது. இருந்த வீட்டையும் விற்று வறியோர்க்கீந்து முன்போலவே ஆலயத்திற் பிரவேசித்து பண்டரிநாதனைப் பூசித்து அங்கேயே வாசஞ்செய்து வந்தார். ராஜாபாயும் தாயுந்தந்தையும் தையல் வேலையால் பகவானுக்கு நைவேத்தியம் அனுப்பிக்கொண்டு, இருப்பதற்கு வீடில்லாமையாயி ஓர் ப்ந்தல் போட்டு அதில் வசித்து வரும்போது ராஜாபாஜி கர்ப்பவதியாய் பூரணமாய் நல்ல சுபமுகூர்த்தத்தில் பூரணசந்திரனைப்போன்ற ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். அப்போது பண்டரிநாதன் முன்னிலையில் பிரசன்னமாகி "அப்பா நாமதேவா! உனக்கு ஒப்பில்லாப் பிள்ளை பிறந்தான். ஆதலால் சீக்கிரம் போய்ப் பார்த்து நாளைவா" என்று பலவந்தமாய் இல்லிற்கு அனுப்பிவைத்தார். நாமதேவரும் இறைவன் கட்டளைப்படி இல்லம் சென்று குழந்தையைப்பார்த்துச் சந்நிதானத்திற்குத் திரும்பினார். குணுபாயும் தாம்ஸேட்டும் அப்பாமகனே! உனக்கு அருமையான மைந்தன் பிறந்தானே இன்றைக்காவது இங்கு இருக்கலாகாதா? என்று வேண்டிக் கொண்டார்கள். நாமதேவரும் நல்லதென்று அப்பந்தலின் ஓர் பக்கலில் சயனித்துக் கொண்டார். அப்போ இடி இடித்து மழைபொழியத் தொடங்கியது. செய்வதென்னவென்று தெரியாது நாமதேவரின் குடும்பத்தார் கலங்கினர். தாம்ஸேட்டி



மைந்தனை நோக்கி அப்பா நாமதேவ் பின்னுக்கு வேணுமென்று ஒரு சதமும் வையாது ஆபரணம் முதல் வீடு ஈருக வித்றுச் சம்பந்தி முதலானோர் நகைக்கப் பந்தலில் சம்சாரம்செய்யும் படிமாகச் செய்துவிட்டாயே! கடும் மழை வந்தால் இளங்குழந்தையும் தாயும் விருத்தாப்பியமுள்ள நாங்களும் நனையமாட்டோமா? குளிரால் வேதனைப்படமாட்டோமா? யாரையாவது இந்தப் பந்தலைச் செம்மையாகக் கட்டி வையப்பா என்று சொன்னார். நாமதேவோ இப்பந்தலுக்குகோ மூன்று காலே யிருக்கிறது. மேலே புல்லுமில்லை. ஆதலால் ஒருகாலும் புல்லும் இவ்விரவில் எங்கிருந்து தேடுவேன். யாரிடம் போய்க்கேட்பேன். அப்படி இவைகளகப்பட்டாலும் கட்ட என்னால் முடியுமா? கூலியாளரை அழைத்தால் அவர்களுக்கு கூலி கொடுக்க என்னிடம் பணம் இருக்கின்றதா? இதற்குத்தானா என்னை இருக்கச் சொன்னீர் என்று கோவிலுக்குப் போகத் தொடங்கினார்.

குணுபாயி நாமதேவரை மறித்து அப்பா புத்திரா நாங்கள் எவ்வளவு அருமை பெருமையாய் உன்னைக்காப்பாற்றினோம். அதுபோலவே உன் மைந்தனை நீ பாதுகாக்க வேண்டாமா? மனைவி மக்களைக் காப்பாற்றுவதும் தொல்லையா? நாங்கள் விருத்தாப்பிய மேலீட்டால் ஒன்றுஞ் செய்யக்கூடாமல் தடுமாறுகிறோமே நீ இவற்றை அறியாதவனல்லவே என்று எடுத்துரைத்தார். நாமதேவர் அன்னையே! எல்லோருக்கும் பகவான் துணையாயிருக்க ஒருவரையொருவர் காப்பாற்றுவதென்பது காந்தன் பக்திக்குக் குறைவல்லவா? ஈ, எறும்பு முதல் சகல ஜீவராசிகளுக்கும் சுக துக்கம் அறிந்தூட்டும் கர்த்தவ்யம் இக்குழந்தையைக் காக்காமல் கைசோரவிடுமா? நமக்குத் துன்பந்தரவுட்படுவாரா? என பலவுரைகளைக்கூறி நேரங்கடந்ததாலும் பெற்றோர் சொல்லைத் தட்ட முடியாமையாலும் சயனித்த வண்ணமே பகவானைத் தியானஞ் செய்து கொண்டு மழை, காற்றுக் குளிரால் வருந்தி நித்திரையின்றி யிருந்தார்.

பலத்த காற்றடிக்கவே குணாபாயி முதலியோர் விழித்துக் குழந்தையை நனையாமல் தட்டிகளை வைத்து மறைத்து பந்தல் வீழ்ந்து போமோ என மனங்கலங்க என்செய்வோம் பண்டரிநாதா! நீயே துணை எனத் தோத்திரஞ் செய்து கொண்டே கண்ணயர்ந்தனர்.

பக்தவத்சலன் தன் அருமைக் குழந்தைகளின் வேண்டுகோளைச் செவிசாய்க்காதிருக்கவில்லை. உடனே ஏழைக்கூலியாளாக பந்தலுக்கு ஒரு காலும் புல்லும் கையிற் கொண்டு அங்கு வந்து ஓநாமதேவரே! என்று பன்முறை உரக்கக் கூப்பிட்டார். நாமதேவர் கேட்டு இதென்னடா ஹரி, ஹரி என்று பஜனை செய்ய வயோதிகப் பெற்றோரும் இப்போதான் தூங்கியிருக்கிறார்கள். அவர்களை எழுப்பவும் எனது தியானத்தைக் கலைக்கவும் எவனோவந்து கொள்ளை கொடுத்தவன் போன்று கத்துகின்றானே, சம்சாரம் சாகரம் என்பது பொய்யல்ல என மௌனமுற்றிருந்தார். கூலியாளோ விடவில்லை! நாமதேவை விழித்து நீயாருக்காகச் சம்சாரஞ் செய்கின்றாய். உனது மாமன் பணக்காரனாக இருந்தும் உன் குழந்தையும் பெற்றோரும் நனையாதிருக்க ஒரு கட்டுப்புல்லும் ஒருபிடிநாரும் அனுப்பவில்லை. நான் பெருத்த குடும்பியாயிருந்தும் ஜீவகாருண்யத்தால் இப்பந்தலை நிறுத்திக் கட்டுவோம் என ஓர் உதவிவேண்டி அழைத்தேன். நானோ தனியாக உழைக்கின்றேனே எனக்கூறியபடி மூன்று காலில் நின்ற பந்தலை நாமதேவர்மேல் விழும்படி செய்தார். பந்தல் விழுந்து விட்டது எழுந்து வாவெனக் கையைப்பிடித்திழுத்தார். நாமதேவர் வெளியேற முடியாது கஷ்டப்பட்டு வெளியேறிக்கூலியாளை நோக்கி நீ வேண்டுமென்றே என்மீது விழுத்தினாய் எனப்பலவாறு வையத் தொடங்கினார்.

கூலியாளன் சிரித்து ஓ நாமதேவா கண்டபடி வையாதே, நானும் ஏழை ஆனதாலும் உனது பெற்றோரின் பழைய நட்பினாலும் உதவிசெய்ய வந்தேன். கோபியாது சற்று என்னுடன் பந்தலைக் கட்டு எனக் கூறிக் காலை நட்டுக் கட்டிப் புல்லைப் பரப்பி, நாமதேவை உள்வைத்துத் தட்டிகளைக்கட்டி வெளியேற முடியாது செய்து களைத்தவர்போன்று அப்பா! இராத்திரியெல்லாம் இந்த மூடாத்மாக்களுக்காக வெகு கஷ்டப்பட்டேன். இனி இவர்கள் கூலிகொடுப்பதெப்போ

127ம் பக்கம் பார்க்க



# ஜீவகாருண்யம்

காமகோடி

கருணைதான் உலகில் ஒப்பற்ற பொருள். அதனை எல்லாரும் உடையவர்களாக இருக்க வேண்டும். இதுவே மனிதராகப் பிறந்தவர்கள் எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டிய முக்கியதர்மம்.

அஹிம்ஸா—பரமோ—தர்ம :

ஜீவஹிம்ஸை செய்யாதிருப்பதே முதல் தர்மம். கருணைதான் அதற்குக் காரணம். இறைவன் கருணையே உருவாகக் கொண்டவர்-

"கருணையே உருவமாகி" என்கிறார்—சேக்கிழார்.

நம் எல்லோருக்கும் இறைவன் கருணையைப் பெறுவதில் விருப்பம் தான். ஆனால் எல்லோரும் அக்கருணையைப் பெறுகிறார்களா? இல்லை. சிலர்தான் பெறுகின்றனர். அநேகர் இறைவனது கருணையைப் பெறுவதில்லை. ஏன்? இறைவன் சிலருக்குக் கருணைபுரிந்து பலருக்குக் கருணை புரியாமல் இருப்பதாயின் அவர் பாரபக்ஷமுள்ளவராவாரல்லவா? கடவுளுக்கு எல்லோரும் குழந்தைகள்தானே. தாயானவள் தன் குழந்தைகளில் சிலருக்கு அன்பு பாராட்டி பால் அன்னம் ஊட்டி மற்றவர்களைப் பட்டினி போடுவாளா?

இறைவன் பலருக்குக் கருணை செய்யாதிருப்பதாயின் அதற்குத் தகுந்த காரணமிருக்கவேண்டும். அவரோ கருணைக்கடல். பலர் கடல் தண்ணீரை வேண்டியவளவு எடுத்துச் செல்லினும் கடல் நீர் கொஞ்சமாவது குறைவதில்லை. அதுபோன்றதல்லவா அவர் கருணை? கடவுள்கருணை நமக்

கிருந்தால் காக்கைகள் கோடி கோடி நின்றாலும் ஒரு கல்லுக்கு முன் நிற்காது. அதுபோல் கடவுள் கருணை மாத்திரம் நமக்கிருந்தால் நமது கோடி கோடிக் கணக்கான வினைகளும் நம்மைவிட்டுப் பறந்தோடிப்போம். கடவுள் கருணையை அளவிட முடியாது. அது தனிப்பெருங் கருணை. இத்தகைய ஆண்டவன் கருணையை மக்களனைவரும் எய்தவேண்டாமா? அவர்கருணையை யளிக்கத் தயங்குவதில்லை. அவரோ பக்ஷ பாதமற்றவர். பின் ஏன் பலருக்கு அவர் கருணை எட்டாததுபோல் தோன்றுகிறது? அப்படித் தோன்றுவது அவரவர்களின் குற்றம்தான். குளிர்காலம், பனி அதிகம். இவர் குளிரால் வாடுகிறார்கள். ஒருவன் நான் குளிரால் கஷ்டப்படுகிறேனே, கடவுளே உமக்குத்தயவில்லையா என்று கதறினான். மற்றொருவன் ஆங்கு அருகிலிருந்த சுள்ளிகளைப் பொறுக்கிக் குவித்து இரண்டு கற்களை உரைத்து நெருப்புண்டாக்கி சுள்ளிகளைக் கொளுத்தி தன் குளிரைப்போக்கிக்கொண்டான். இவ்விருவரில் கடவுள் ஒருவனிடம் கருணை காட்டிக் குளிரைப் போக்கினார் என்று சொல்லமுடியுமா. அதுபோல் கடவுள் கருணைக்கு நாம் ஏற்றவர்களாக வேண்டும். நாம் மற்றவர்களிடம் கருணையோடிருப்பதே கடவுள் கருணையை நம்மிடம் காட்டும்படி செய்யும் வழி. நீரில் துணியைப் போட்டால் துணி நீரை இழுத்துக் கொள்ளுகிறது. பாராங்கல்லைப்போட்டாலோ அது நீரை இழுப்பதில்லை. இது நீரின் குற்றமா? கல் கடினமாக இருப்பதால் நீரை இழுப்பதில்லை. அதுபோல் நம்மனது கடினமாக விருந்தால் கடவுளின் கருணையைப்பெற நம்மால் முடிகிறதில்லை. இரக்கம்தான் கருணைக்குக் காரணம். கருணையினால்தான் கருணையைப் பெறவேண்டும். ஆதலால் நாம் ஏழைகளிடம் காணும் கஸ்டத்தைக்கண்டு மனமிரங்கிக் கருணைபுரிவோமானால் நம்மீது இறைவனும் கருணை புரிவார். நாம் அவ்விதம் செய்யாமல் கல்லைப்போல் கடினமாகி மனதுடையவராக விருந்தால் பொங்கும் கடவுளின் கருணையை இழுக்க நம்மால் முடிகிறதில்லை. நாம் யாவரையும் இன்னுயிரைப்போல் எண்ணி இரங்கவேண்டும். இக்கருணையில்லாதவர் எவ்வளவு தவமியற்றினும் பூசைகள் செய்தாலும் இறைவன் கருணையை அடைய முடியாது.



கருணையினால் அம்மையப்பனுடைய கருணையையும் காக்ஷியையும் பெறலாம். நாம் காட்டும் கருணை பிரதியுபகாரம் நாடாததாகவும், மழை பொழிவது போல பொழிவதாகவுமிருக்க வேண்டும். ஸ்ரீ பாகவதத்தில் ரந்திதேவர் என்பவரின் சரித்திரம் இக்கருணை மழைக்குத்தக்க உதாரணமாகும்.

பரதவம்ச அரசகுலத்தைச் சார்ந்த ரந்திதேவரென்றொருவர் இருந்தார். அவர் தனக்கிருந்த கணக்கிடமுடியாத செல்வமனைத்தையும் ஏழைகளின் பசிக்கொடுமையைத் தீர்க்க உபயோகித்தால் கடைசியில் அவரிடம் ஒன்றுமில்லாமல் போய் விட்டது. அப்பொழுது அவரும் அவர் குடும்பமும் 48 நாள் அன்னாகாரமில்லாமல் இருக்கும்படி நேர்ந்தது. 49 வது நாள் அவருக்கு யதேச்சையாய் கொஞ்சம் கோதுமை கஞ்சியும் தண்ணீரும் கிடைத்தது. அவர் அக்கஞ்சியைக் குடித்து தானும் தன் குடும்பத்தாரும்பசியையாற்றிக்கொள்ளலாம் என்றிருக்கையில் ஒரு பிராமணன் அவர்முன்தோன்றி எனக்குமிகவும் பசியாயிருக்கிறது; ஏதாவது ஆகாரம் இருந்தால் கொடுங்கள் என்றான். ரந்திதேவர் உடனே அப்பிராமணனை ஸ்ரீமன் நாராயணனைக் கருதி தன்னிடமிருந்த கஞ்சியில் ஒரு பாகத்தைக்கொடுத்தார். அப்பிராமணன் போனவுடன் அவர் ஆகாரம்செய்ய ஆரம்பிக்க ஒரு குடியானவன் தனக்கு ரொம்ப பசியாயிருப்பதாகச் சொல்லி அவரை உதவும்படி கேட்டான். அவனுக்குத் தன்னிடம் மிச்சமிருந்த கஞ்சியில் ஒரு பாகத்தை ஸ்ரீமன் நாராயணனுக்கு அர்ப்பணம் செய்வதாக நினைத்துக் கொடுத்துவிட்டார். அவனும் திருப்தியடைந்து சென்றான். பின்னும் கொஞ்சம் கஞ்சிதான் மீதியிருந்தது. அப்பொழுது சில நாய்களுடன் ஒருவன் வந்து, ''எனக்கும் எனது நாய்களுக்கும் மிகப்பசியா யிருக்கிறது. ஏதாவது எங்களுக்கு ஆகாரம் கொடுங்கள்'' என்றான். ரந்திதேவர் மனதில் கொஞ்சமும் வருத்தப்படாமல் சந்தோஷத்துடன் அவனையும் அவன் நாய்களையும் ஸ்ரீமன் நாராயணனாகவே கருதி தன்னிடம் பாக்கியிருந்த கஞ்சியை அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்.

இப்பொழுது ஜலம் மாத்திரம் மீதியிருந்தது. அதை அவர் அருந்தப்போகும் சமயத்தில் ஓர் சண்டாளன் அங்கு தோன்றி எனக்குத் தாகம் அதிகமாக இருக்கிறது. உயிர் தத்தளிக்கிறது, எனக்குக்கொஞ்சம் ஜலம் கொடுங்கள் என்ருன். ரந்திதேவர் உடனே முக மலர்ச்சியோடு,

*ந-காமயே - அஹம் - கதிம் - ஈச்வராத் - பராம்*
*அஷ்டர்த்தியுக்நாம் - அபுனர்பவம் - வா |*
*ஆர்த்திம் ப்ரபத்யே - அகிலதேஹபாஜாம் -*
*அந்தஸ்தித:—யேன - பவந்தி - அதுக்கா : ||*

ஸ்ரீமத் பாகவதம் 9-21-12

ஈச்வரனிடத்திலிருந்து அஷ்டைஸ்வர்யத்தோடு கூடிய உத்தமமான ஸ்தானத்தையோ மறுபிறப்பில்லாதிருக்கும் உத்தம கதியையோ நான் பிரார்த்திக்கவில்லை. எல்லா ஜனங்களின் கஷ்டங்கள் அனைத்தையும் நான் எடுத்து அனுபவிக்கிறேன். அதனுல் அவர்கள் துக்கம் தீரட்டும்.

*க்ஷுத் - த்ருட் ச்ரம:—காத்ரபரிச்மரம்-ச-*
*தைன்யம் - க்லம: -- சோகவிஷாத மோஹா:—*
*ஸர்வே நிவ்ருத்தா :—க்ருபணஸ்ய - ஜந்தோ :—*
*ஜிஜீவிஷோ:—ஜீவஜலார்பணாத் - மே.*

ஸ்ரீமத் பாகவதம் 9-21-18

''ஜீவிக்க வேணுமென்று ஆசையுடைய சகல ஜந்துக்களும் இப்பொழுது நான் கொடுக்கும் ஜலத்தினுல் பசி, தாகம், தேகம் மனது இவைகளின் களைப்பு, மனத் தளர்ச்சி, துக்கம், மோஹம் இவைகளற்றவர்களாக ஆகட்டும்'' என்று சொல்லி தன்னிடமிருந்த தண்ணீரையும் அச்சண்டாளருக்குக் கொடுத்து உதவினர், இப்படி இவர் எல்லா ஜீவராசிகளையும் பகவானுகை எண்ணிக் கொடுத்த போது தன்னிடம் யாசித்தவர்கள் எல்லாம் தேவலோகத்திலிருந்து ஸ்ரீ விஷ்ணுவால் தாண்டப்பட்ட தேவர்களாகத்தோன்றினர்கள். ரந்திதேவர் அவர்களை நமஸ்கரித்துவிட்டு ஸ்ரீ நாராயணனிடமே செலுத்திய மனதையுருடையவராக ஆனுர். இவ்விஷயமே மஹாபாரதத்தில் வேருெரு கதையினுல் விளக்கப்படுகிறது.



தர்மபுத்ரர் அசுவமேத யாகம் செய்வதற்கு அன்னதானம் ஏராளமாகச் செய்தார். அந்த அன்னதானத்தைச் சபை—யோர்கள் அனைவரும் புகழ்ந்தனர். அச்சமயம் ஒரு பக்கம் தங்கமாய்ப் பிரகாசித்த சரீரத்துடன் கூடிய ஒரு கீரிப்பிள்ளை அங்கு வந்து, ''குருக்ஷேத்திரத்தில் மாவைக் கொடுத்த உஞ்சவ்ருத்தி பிராமணனுடைய தானத்திற்கு இந்த யாகம் ஈடாகாது எனச் சொல்லிற்று, இதைக் கேட்ட சபையோர்கள் ஆச்சரியமடைந்து அக்கீரிப்பிள்ளையைப் பார்த்து, ''நீ யார்? நீ ஏன் இப்படிச் சொல்கிருய்!'' என்று கேட்டார்கள் கீரிப்பிள்ளை பின்வருமாறு சொல்லிற்று:-

குருக்ஷேத்திரத்தில் உஞ்சவ்ருத்தி செய்து பிழைக்கும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவனுடைய குடும்பத்தில் அவன் மனைவி, புத்ரன், நாட்டுப் பெண் ஆகிய மூவர் இருந்தனர். இந்த பிராமணன் கொண்டு வருவதிலிருந்தே அவர்கள் ஜீவித்து வந்தனர். ஒரு சமயம் தேசத்தில் பஞ்சம் ஏற்படவே அவருக்கு கோதுமை மாவுதான் கொஞ்சம் கிடைத்தது. அதை 4 பாகமாகச் செய்து சாப்பிட ஆரம்பித்தார்கள். அந்த சமயம் ஒரு விருந்தாளி வந்து சேர்ந்தார். பிராமணன் அவரை உபசரித்து தன்னிடமிருந்த தன் பங்கு மாவைக் கொடுத்து சாப்பிடச் சொன்னுர். வந்த விருந்தாளிக்கு அதைச் சாப்பிட்டும் பசி தீரவில்லை. அவருடைய ஸ்திதியைப் பார்த்த பிராமணன் மிகவும் வருத்தமடைந்தார். இதைப் பார்த்த அவர் பத்தினி தன் பாகத்தையும் விருந்தாளிக்குக் கொடுத்தாள். அதைத் தின்றும் அவர் பசி தீரவில்லை. பிறகு பிராமணனுடைய புத்திரனும் அவன் மனைவியும் தங்கள் பாகங்களையும் கொடுத்து விட்டார்கள். உடனே தேவ லோகத்திலிருந்து புஷ்பவர்ஷம் பெய்தது. வந்த விருந்தாளி பிராமணனைப் பார்த்து, ''உங்கள் குடும்பத்தவரைப்போல் நான் கண்ட

தில்லை. தங்களுக்கென்று கொஞ்சங்கூட வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்துவிட்டீர்களே. உங்களுடைய தானமே தானம். நான் தாம தேவதை; உங்களைப் பரிசோதிக்க வந்தவன். உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் சுவர்க்கலோகம் அழைத்துச் செல்ல தேவர்கள் விமானத்துடன் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சுவர்க்கத்தை யடைவீர்களாக'' என்று ஆசிகூறி மறைந்தார்.

அவர்கள் நால்வரும் விமானமேறி சுவர்க்க மடைந்தார்கள். அந்த மாவைச் சாப்பிட்ட சமயத்தில் கீழே உதிர்ந்த மாவும் ஜலமும் என்மேல் பட்டு என் சரீரத்தின் ஒரு பாகம் தங்கமயமாயிற்று. மற்றொரு பாகமும் அம்மாதிரியாகும் என்று நினைத்து அநேக யாகங்களுக்குப் போனேன். இந்த யாகத்திற்கும் ஆசையோடு வந்தேன்; ஆனால் என் சரீரத்தின் மற்ற பாகம் தங்கமாகவில்லை. அதனால் தான் இந்த யாகம் அப்பிராமணனுடைய மாவு தானத்திற்கு ஈடானதில்லை என்று சொன்னேன் என்றது.

இக்கதைகளில் சொல்லியபடி தனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமலும், தன்னலம் பார்க்காமலும், ஜாதிமத வித்தியாசம் பாராமலும், வந்தவருக்கு இல்லையெனமல் ஈவது. சகலஜீவராசிகளும் பகவானுடைய ஸ்வரூபம் என்றுஎண்ணி எல்லாவற்றினிடமும் கருணை காட்டுவதே மானிடஜன்மமெடுத்ததின் பயனாகும்.

# துணுக்குகள்

உன் தெய்வத்தன்மையைச் சதா சிந்திப்பாயாக. பிறரிடம் அத்தெய்வத்தன்மையைக் காண முயல்வாயாக. உன்னைத் துன்புறுத்துவர் மாட்டும் தெய்வத்தன்மையைக் காண்.



120-பக்கத்தொடர்ச்சி நாமதேவர்

என்று உரைத்து நாமதேவை அழைத்து நான் இந்த வேளையில் வந்து மழையில் நனைந்து பந்தலைக் கட்டினமைக்குச் சீக்கிரங் கூலி கொடு. ஓர் காலுக்கும் புல்லுக்கும் நாருக்கும் விலைகொடு எனக்கோ நல்ல நித்திரை வருகின்றது ஆயாசமாக விருக்கின்றது. என்று சொல்லத் தொடங்கினர்.

அது கேட்ட நாமதேவர் ஐயா உம்மை இவ்விடம் யார் அழைத்தார்கள் கஷ்டப்படச் சொன்னேனா? என்று வாதமிட்டார் பகவான் அடா நாமா! நீகூலி தந்தால் ஆச்சு இல்லையெனில் பந்தலைத் தீவைத்து விடுவேன் என்று கூறி மறைந்தார்.

இதைக்கண்ட இராஜாபாயி ஆச்சரியத்துடனும் கலவரத்துடனும் மாமன் மாமியிடமும் ஓடி நடந்தவற்றைக்கூறி, எல்லோரும் வெளியேற முயற்சித்தனர். பகவானல் கட்டிய கட்டுக்களானதால் இலகுவில் அறுக்கமுடியாது பயந்து கூக்குரலிட்டனர்: சத்தங்கேட்ட அயலவர்கள் ஓடி வந்து விஷயத்தை யறிந்து உதவி செய்தனர். அவர்கள் உதவியுடன் நாமதேவ் வெளி யேறினர். மற்றவர்கட்கு ஆறுதல் மொழிகூறி பக்கத்தே எவரும் வராத வண்ணம் சூரியனுதிக்கும்வரை காத்திருந்து விடிந்ததும் சென்று விட்டனர். நாமதேவரோ வெளியேறியவுடன் நேரே சந்திர பாகை நதிக்குச் சென்று நீராடிக் கோவிலுள் சென்று வணங்கித் தோத்திரஞ் செய்து ஒரு பக்கத்தே நிற்சிந்தையராய் துயின்றார்.

## -துணுக்குகள்-

நீ பாவி என்று எண்ணாதே, அழுக்கினல் அழுக்கை அகற்றமுடியுமா? நாம் பாவி என்கின்ற எண்ணம் நம்மைப் படுகுழி யிலேயே தள்ளும். அது எப்போதும் நம்மை மேன்மைப் படுத்தாது. நீ பலம் வேண்டுமானல் பலமின்மையை பற்றிச் சிந்திப்பதால் அது கிட்டாது. ஆகையால் உனது உண்மைச் சுபாவமாகிய தூய்மையைப்பற்றிச்சிந்தனை செய்.

இங்கே குணபாயும் ஸேட்டும் எழுந்து வெளியில்வந்து பந்தல் கட்டியிருக்கும் ஒழுங்கைப்பார்த்து அதிசயித்தனர், உள்ளே வந்து பார்க்கையில் அக்காலும், புல்லும் பொன்மயமாயிருக்கக்கண்டு இவை யாவும் பகவானின் திருக்கூத்தெனத் தீர்மானித்து ஓர் துண்டு புல்லைக் கொண்டுபோய் விற்று வாடகை வீட்டைப்பேசி அவற்றையெல்லாம் பத்திரப்படுத்தி மறைத்துவிட்டு நீராடிப் பண்டங்களைப் வேண்டிப் போஜனஞ் சமைத்துத் தட்டில் ஏந்திக் கோவிலுட் சென்று மகனை அழைத்து அவர்கையில் கொடுத்து பகவானுக்கு ஊட்டிச் சீக்கிரம் வீட்டிற்குவா எனக் கூறிப்போந்தார். ஆச்சரியத்துடன் உணவை எம்பெருமானுக்குப்படைத்து ஊட்டினார். பகவானோ அப்போதும் அவரைச் சும்மாவிடவில்லை. தனது கூலியைத் தரும்படி நச்சரித்தார். நாமதேவ் அப்பா என்னை உமக்குக் கூலி கொடுக்கும் எஜமானராய்ச் செத்துவிட்டீரா? எனக்கூறி உணவையூட்டி வீடு திரும்பினார். வீடெல்லாம் பண்டங்களும் ஆனந்தமும் நிறைந்திருக்கக் கண்டு ஆனந்தக்கண்ணீர் உகுத்தார். வந்தபொருளையெல்லாம் சாதுக்கட்கு வழங்கத்தொடங்கினார். அது கண்ட பெற்றார் மகனைச்சிறிது மிச்சம் பிடிக்குமாறு வேண்ட, தருமத்தின் மாண்பையும் தருமம் தலைகாக்கும் என்ற உண்மையை விரிவாய் எடுத்துரைத்து இரப்பவர்க்கு இல்லையென்னாது ஈந்து பண்போடு பஜனைசெய்திருந்தார்.

வறுமைநோய் பின்னும் அவர்களைப் பீடித்தது. ஆனால் மனங் கலக்கவில்லை. ஹரிநாமத்தை மறவாது உச்சரித்துக் கொண்டிருக்கும் நாளில் குமாரனின் காதுக்குத்து வைபவம்வந்தது. அதற்கும் பொருளில்லாது மாமன் வீடும்செல்ல மனம் நாணி இருக்கும்போது, பகவானே வர்த்தகன்போன்று உருவெடுத்து வேண்டிய சீர்வகையுங் கொண்டுவந்து குணபாயி எல்லோரையும் அழைத்துக்கொண்டு எல்லோரும் அதிசயிக்கும்படி எல்லோர் முன்னிலையிற் தோன்றி வைபவத்தை இனிது நடத்திமறைந்தருளினார்.

## மகா சிவராத்திரியை விடுமுறையாக்குக.

சைவசமயிகளின் மிகப்பிரதான விரததினமாகிய மகா சிவராத்திரி வெகு அண்மையில் வருகிறபடியால் ஏற்கெனவே கனம் பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் அளித்த வாக்குறுதியின்படி இதற்கு அடுத்ததினமாகிய (17-2-58) மாசிமாதம் ஆறுந்திகதியை அரசாங்க வங்கி விடுமுறையாகப் பிரகடனம் செய்யும்வண்ணம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதுடன் இத்தகைய தீர்மானங்களை உடனடியாக அனுப்புவதன் மூலம் இத்தினத்தின் முக்கியத்துவத்தை அரசாங்கத்திற்கு உணர்த்தும்வண்ணம் சகல இந்துமதஸ்தர்களையும் மிகப்பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.


## ✠❊✠ வாய்வு சூரணம். ✠❊✠

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்புவாய்வு, மலக்கட்டு
மலபந்தம், அஜீரணம், கைகால் அசதி, பிடிப்பு,
பசியின்மை, வயிற்றுவலி, பித்தசூலை
பித்தமயக்கம், புளியேப்பம், நெஞ்சுக்கரிப்பு, முதலிய வாய்வுரோ
கங்களை நீக்கி ஜீரணசக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும்
மிகச்சிறந்த சூரணம்

உபயோகிக்கும் முறை:-

இந்தச் சூரணத்தில் ½ தோலா அளவு எடுத்து அத்துடன் ½ தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்கு முன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலைமாலை தொடர்ந்து உட்கொள்ளவேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக்கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய் நிறையச் சாப்பிடலாம். வாரம் ஒருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினால் தயாரிக்கப் பெற்றது.
தபால் செலவு உட்பட டின் ஒன்று 3 ரூபா 75 சதம்.
[பத்தியமில்லை]
சம்பு இண்டஸ்ரீஸ் – சேலம் 2. (S. I.)
இலங்கையில் கிடைக்குமிடம்

**ஆத்மஜோதி நிலையம் :: நாவலப்பிட்டி.**

**சக்தி அன் கோ,** 35, கொத்மலைவீதி **நாவலப்பிட்டி**

## நமது சமயவிளக்கம் என்னும் புத்தகம்

(யோகி. சுத்தானந்த பாரதியாரால் எழுதப்பெற்றது)

50 சதம் பெறுமதியான புத்தகம் 25-சதமாகக் கொடுக்கின்றோம் தபாற்செலவு உட்பட 30 சதமாகும் வேண்டுவோர் 30சத முத்திரைகளனுப்பியே பெற்றுக்கொள்ளலாம்

Regd, at the G. P.O. as a News Paper M. L. 59/300

## இந்தியாவிலுள்ள சந்தா நேயர்களுக்கு

இந்தியாவிலிருந்து சிலோனுக்குப் பணம் அனுப்புவதில் சில தடைகள் இருப்பதால் இந்தியாவிலுள்ள சந்தாநேயர்கள் யாவரும் பின்வரும் விலாசத்திற்குத் தமது சந்தாப்பணத்தை அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். பணம் அனுப்ப வேண்டிய விலாசம்:

# R. Veerasambu,

SAMBINDUSTRIES,

# SALEM 2, S. I.

மேற்படி விலாசத்திற்குப் பணம் அனுப்பியவுடன் இவ்விடமும் ஒரு தபால் அட்டை மூலம் அறியத்தர வேண்டுகின்றோம். அங்ஙனம் அறியத் தந்தவுடன் இங்கிருந்து நேராக ரசீது அனுப்பி வைக்கப்பெறும்.

**ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி (சிலோன்)**

## ஆத்மஜோதி விசேடமலர்

மலர் குறிப்பிட்ட காலத்திற்கு வெளிவர முடியாமைக்கு வருந்துகின்றோம். வெள்ளப்பெருக்குக்காரணமாக அச்சகத்தாருக்கு குறிப்பிட்ட காலத்தில் வேண்டிய கடுதாசிகள் கிடைக்காமையே காரணமாகும். எப்படியும் ஒரு மாதத்திற்குள் வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம். இன்று வரை பதிவு செய்துகொள்ளாதோர் பதிவுசெய்துகொள்ள வேண்டுகின்றோம்.

*Hony, Editor*, K. Ramachandra
*Printed & Published By* N. Muthiah,
Athmajothi Nilayam — NAWALAPITIYA.
Printed at Sri Murugan Press - Punduloya. 15-2-58